பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 215

திங்கட்கிழமை
29 ஜூன் 2026

ஆனி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

# இலங்கை உரிமை மீறல்களுக்கு சர்வதேச பொறிமுறையே தீர்வு!

### ஐ.நா. சபை உறுப்பு நாடுகளிடம் 9 அமைப்புகள் கூட்டாக வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 29

இலங்கையில் தொடரும் சித்திரவதைகள் மற்றும் மனிதத்தன்மையற்ற செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஒரே தீர்வு சர்வதேச நீதிப்பொறிமுறை மட்டுமே என்று வலியுறுத்தியுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் உள்ளிட்ட 9 சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள், சித்திரவதைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தின் 30 ஆவது உறுப்புரையைப் பிரயோகிக்க வேண்டும் என்று உறுப்பு நாடுகளிடம் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

»15




## பக்திபூர்வமாக நடைபெற்ற நாகபூசணி அம்மன் தேர்

யாழ்ப்பாணம், ஜூன் 29

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தின் பராபவ வருட மஹோற்சவப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக நடைபெற்றது. காலை 7 மணியளவில் வசந்தமண்டபப் பூசைகள்

»15

### நேற்று ஐந்தாவது நாளாகவும்

## கேப்பாபிலவில் தொடர்கின்றது காணி விடுவிப்புப் போராட்டம்!

முல்லைத்தீவு, ஜூன் 29

கேப்பாபிலவில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தங்களது பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி, அந்தப் பகுதி மக்கள் நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கேப்பாப்பில

»15

## பிரான்ஸ் செல்கிறார் ஜனாதிபதி அநுரகுமார



கொழும்பு, ஜூன் 29

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை பிரான்ஸுக்கு உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவின் பணிப்பாளர் நாயகம் பிரசன்ன பெரேரா தெரிவித்துள்ளார். இந்தப் பயணத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட உயர் அதிகாரிகள்

»15



## செம்மணியில் ‘உரிமைப்பந்தம்’

யாழ்ப்பாணம், ஜூன் 29

செம்மணியில் உள்ள அணையா விளக்குத் திடலில், நேற்று உரிமைப்பந்தம் அமைதி வழி மக்கள் எழுச்சி நிகழ்வு நடைபெற்றது. மக்கள் செயல் இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

»15



## ‘முறுக்கித் திரிந்தவர்களை’ மடக்கிப்பிடித்த பொலிஸ்

கிளிநொச்சி, ஜூன் 29

கிளிநொச்சிப் பகுதியில் பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட 30க்கும் மேற்பட்ட அதிவேக மோட்டார் சைக்கிள்களையும், சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட 20க்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களையும் பொலிஸார் அதிரடியாகப் பறிமுதல் செய்துள்ளனர்.

»15

## விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

உழவியந்திரம் மோதி காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், நாவாந்துறையைச் சேர்ந்த செபஸ்டியாம்பிள்ளை ஜோர்ச் வாஷிங்டன் (வயது-57) என்பவரே உயிரிழந்த

»15



## ரூபா இந்த ஆண்டு 8 வீதத்தால் வீழ்ச்சி



கொழும்பு, ஜூன் 29

2026 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் மதிப்பு 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி உறுதிப்படுத்தியுள்ளது.

மத்திய வங்கியின் தரவுகளின்படி, கடந்த வெள்ளிக்கிழமை வர்த்தக முடிவில் அமெரிக்க டொலரின்

»15

## சபாநாயகரை இலக்கு வைத்து எதிரணிகள் இரகசியத் திட்டம்

கொழும்பு, ஜூன் 29

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு எதிரணிகள் திட்டமிடுகின்றன எனத் தெரியவருகின்றது. அரசியலமைப்பு மற்றும் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் என்பவற்றை மீறியுள்ளார் என்பதைப் பிரதான குற்றச்சாட்டாக முன்வைத்து இந்த ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் வெற்றிடத்தை நிரப்பும் விடயத்தில் அரசியலமைப்பு

»15

## டித்வா சீரமைப்பு பணி மேலும் தாமதமடையும்

கொழும்பு, ஜூன் 29

2025 ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை அழிவுகளைச் சீரமைக்கும் பணிகளை 2026 ஆம் ஆண்டுக்குள் நிறைவு செய்ய முடியாது என நிதி அமைச்சின் 2027 ஆம் ஆண்டுக்கான நிதி மூலோபாய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக இந்த ஆண்டு 500 பில்லியன்

»15

புரச்சந்தி முரளி

“முறுக்கேறி முறுக்கித் திரியிறவையைப் பிடிச்சு நல்ல முறி குடுத்தால்தான் உந்த அக்சிடெண்டுகள் குறையும் கண்டியளோ”

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 28.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4474 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 28 39 69 79 |
| விசேட எழுத்து | K |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 28.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1541 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 37 47 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 28.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0500 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 4 5 0 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 28.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2580 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 11 |
| வெற்றி இலக்கங்கள் | 10 17 27 63 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 28.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6232 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 5 6 7 1 8 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 28.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3575 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 13 25 69 82 |
| விசேட எழுத்து | D |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 28.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0348 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 37 62 |

# ஊழல்விசாரணைஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 29

**கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த பதவிக்கால நீடிப்பை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழங்கியுள்ளார்.**

கடந்த ஆண்டு டிசெம்பர் 30 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அமைக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் பதவிக்காலம் இன்று முடிவடையவிருந்த நிலையிலேயே,
விசாரணைகளை நிறைவு செய்து இறுதி அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக இந்த கூடுதல் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கொழும்பு மாநகர சபைக்குள் நடைபெற்ற ஊழல், மோசடி மற்றும் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்துதல் போன்ற குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்கும் பொறுப்பு இந்த ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)



# துப்பாக்கி மாயம் பொலிஸ் கைது!

கொழும்பு, ஜூன் 29

தன்னுடைய உத்தியோகபூர்வ துப்பாக்கி காணாமல் போனமை தொடர்பாக, யட்டியந்தோட்டை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பான பொறுப்பதிகாரி கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சீதாவகபுர குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளினால் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)

# மலேசிய ஆளுநர் இலங்கை வருகை

கொழும்பு, ஜூன் 29



இலங்கை மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான பல தசாப்த கால வரலாற்று மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், மலேசியாவின் மலாக்கா மாநில ஆளுநர் துன் முகமட் அலி ருஸ்தாம் இன்று திங்கட்கிழமை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். மலாக்கா மாநிலத்துக்கும் இலங்கைக்குமிடையே பல நூற்றாண்டுகள் பழமையான வர்த்தக கலாசாரத் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு, இரு நாடுகளுக்குமிடையிலான சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது இந்த விஜயத்தின் நோக்கமாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, உலக பாரம்பரிய தளங்கள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களை மையமாகக் கொண்ட ஆன்மிக மற்றும் பாரம்பரிய சுற்றுலாவை இருதரப்பிலும் ஊக்குவிப்பது குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது. (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 28.06.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0940 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கம் | 3 8 9 2 7 5 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 28.06.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3206 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 11 31 35 61 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 28.06.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 12 57 65 77 |
| வெற்றி வாரம் | 5367 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 28.06.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 1036 |
| வெற்றி இலக்கம் | 10 21 47 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 28.06.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| | துலாம் |
| வெற்றி இலக்கம் | 04 14 18 56 |
| சீட்டிழுப்பு வாரம் | 4918 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 28.06.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 13 |
| வெற்றி இலக்கம் | 01 16 47 70 |
| வெற்றி வாரம் | 2382 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 28.06.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 20 52 68 71 |
| வெற்றி வாரம் | 3032 |

# கணிசமாகக் குறைவடையும் இளைஞர் வேலையின்மை

கூறுகிறது அரசாங்கம்

கொழும்பு, ஜூன் 29

சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகள் மூலமாகவும், தனியார் துறையுடனான கூட்டுப் பங்களிப்பின் மூலமாகவும் அரசாங்கம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதால், இலங்கையில் இளைஞர் வேலையின்மை விகிதம் கடந்த ஒரு வருடத்தில் கணிசமாகக் குறைந்துள்ளதாக இளைஞர் விவகார பிரதி அமைச்சர் தினிந்து சமன் ஹேன்னாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டின் இளைஞர்களுக்கு சிறந்ததொரு எதிர்காலத்தை உருவாக்குவதே தற்போதைய அரசாங்கத்தின் முதன்மையான இலக்காகும். இளைஞர்கள் போதைப்பொருள் பழக்கங்களுக்கு அடிமையாவதைத் தடுத்து, அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக முறையான தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அத்துடன், ஒழுக்கநெறி மற்றும் மனித விழுமியங்களை வளர்க்கும் நோக்கில் விளையாட்டு மற்றும் கலைத்துறை சார்ந்த நடவடிக்கைகள் நாடு தழுவிய ரீதியில் ஊக்குவிக்கப்படும். மேலும், இலங்கை இளைஞர்களின் திறமைகளை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்வதற்காக அரசாங்கத்தினால் இரண்டு புதிய திட்டங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன - என்றார். (ச-இ)

# வசந்த சமரசிங்கவின் கருத்துக்கு பல்வேறு தரப்புக்கள் கண்டனம்

கொழும்பு, ஜூன் 29



அரச பணியாளர்களுக்குத் தவணைக்கட்டண முறையில் அரிசி வழங்குவது தொடர்பாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க வெளியிட்ட கருத்துக்கு, விவசாய அமைப்புகள் உள்ளிட்ட பல தரப்பினர் தங்களது பலத்த கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.
அண்மையில் நடைபெற்ற பொது நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர், "அரச பணியாளர்களுக்குச் சலுகை விலையில் 20 கிலோ அரிசியைத் தவணைக்கட்டண முறையில் வழங்கவுள்ளோம். இதனை அவர்கள் சதொச அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்" எனக் குறிப்பிட்டிருந்தார்.
அமைச்சரின் இந்த அறிவிப்புக்கு ரஜரட்ட கூட்டு விவசாய அமைப்பு உள்ளிட்ட தரப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். நல்ல வீடுகள் கட்டவும், வாகனங்கள் வாங்கவும் எதிர்பார்த்து இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்த அரச பணியாளர்களை, இன்று 20 கிலோ அரிசியைக் கூட தவணை முறையில் வாங்கும் நிலைக்குத் தள்ளி அரசாங்கம் அவர்களை இழிவுபடுத்தியுள்ளது என்று அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இலங்கையின் வரலாற்றில் உன்னத உணவான அரிசியை, லீசிங் அல்லது தவணை முறையில் வழங்கிய முதல் வர்த்தக அமைச்சர் என்ற பழிச்சொல்லுக்கு வசந்த சமரசிங்க ஆளாகியுள்ளார் என்றும், அரச பணியாளர்களின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தியமைக்காக அவர் உடனடியாக மன்னிப்பு கேட்க வேண்டும் எனவும் பல தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 6ஆம் தர கல்வி மறுசீரமைப்பு அடுத்தாண்டு முதல் நடைமுறை

**கொழும்பு, ஜூன் 29**

**அடுத்த ஆண்டு முதல் ஆறாம் தரத்துக்குரிய புதிய கல்வி மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு முழுமையான தயார்நிலையில் இருப்பதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.**

கல்வி மறுசீரமைப்புகளின் முன்னேற்றம் தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில், கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ மற்றும் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் பிரதானிகளுக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

புதிய கல்வி மறுசீரமைப்புகள் 5 தூண்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், அவற்றைக் கண்காணிப்பதற்காக 5 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அவற்றின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றங்களை ஆராய்வதற்காக கல்வி அமைச்சரின் தலைமையில் மேலும் ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

ஆறாம் தரத்துக்கான முதலாம் தவணைப் பாட அலகுகள் அனைத்தும் அச்சிட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், இரண்டாம் தவணைப் பாட அலகுகளையும் ஒரே நேரத்தில் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பெண்கள் மீதான பாகுபாடு ஒழிப்பு சர்வதேசக் குழுவில் இலங்கையும்!

கொழும்பு, ஜூன் 29

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற முக்கியத்துவமிக்க சர்வதேசத் தேர்தலில், பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழிப்பதற்கான ஐ.நா. குழுவின் உறுப்பினராக இலங்கையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் பதிவான ஒட்டுமொத்த செல்லுபடியாகும் 185 வாக்குகளில் இலங்கை 144 வாக்குகளைப் பெற்று, போட்டியிட்ட அனைத்து உலக நாடுகளின் வேட்பாளர்களையும் விட அதிகப்படியான வாக்குகளைப்பெற்று முதலிடத்தைப்பிடித்துள்ளதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## ரின் வரி இலக்கத்துக்கு 12 மில்லியன் பேர் பதிவு

கொழும்பு, ஜூன் 29

இதுவரை 12 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வரி செலுத்துவோர் அடையாள எண்களைப் பெற்றுள்ளனர் என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் நிஷாந்த ஜயவீர தெரிவித்துள்ளார். மேலும் சுமார் 5 மில்லியன் மக்கள் தங்களது வரி செலுத்துவோர் அடையாள எண்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் காத்திருக்கின்றனர்.

வரி செலுத்துவோர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளத்துக்குச் சென்று, தங்களை தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிடுவதன் மூலம் தமது வரி செலுத்துவோர் அடையாள எண்களின் நிலையைச் சரிபார்த்துக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு புதிய தலைவர்

கொழும்பு, ஜூன் 29

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் புதிய தலைவராக மருத்துவர் சந்திக எப்பிட்டகடுவ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சங்கத்தின் 2026/27ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போதே, அவர் இந்தப் பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதற்கு மேலதிகமாக, சங்கத்தின் புதிய பொதுச்செயலாளராக மருத்துவர் பண்டார வரகாகொட தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பதவிகளுடன் சேர்த்து, 2026/27ஆம் ஆண்டுக்கான நிர்வாகக் குழு மற்றும் மத்திய குழு உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)



## நாட்டில் அதிகரித்துவரும் நீரில் மூழ்கிய இறப்புகள்

கொழும்பு, ஜூன் 29

நாட்டில் நீரில் மூழ்கி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

பொசன் விடுமுறைக் காலத்தில் ஆறுகள், நீர்த்தேக்கங்கள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் பிற நீர்நிலைகளுக்கு அருகில் பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர் சார்ந்த விபத்துகள் தற்போது அதிகரித்துள்ளன. விடுமுறைக் காலத்தில் பொதுமக்களுக்கு உதவுவதற்காக நாடு முழுவதும் பொலிஸ் உயிர் காக்கும் பிரிவினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டில் இது வரையான காலப்பகுதியில் மாத்திரம் சுமார் 75 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நீர் சார்ந்த விபத்துகளைத் தவிர்ப்பதற்கு பொதுமக்கள் பொறுப்புடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றும் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-இ)




## 'சுனாமியோட மோது , ஆனால்...!'


கொஞ்ச நாளைக்கு முதல் அமெரிக்காவில இருந்து பௌத்த துறவிகளோட உலக அமைதிக்காக 'அலோகா' என்டொரு நாய் இலங்கைக்கு வந்தது. அப்பிடி வந்த அலோகாவுக்கு விதவிதமான சாப்பாடுகள், ஏசி கார், அது நடக்கிறதுக்கு செங்கம்பளம், சுத்திவர அதைப் படமெடுக்க மீடியாக்காரர் எண்டு எல்லாருமே அதைத் தலையில தூக்கிவைச்சுக் கொண்டாடினவை. ஆனால், எந்தவித பந்தாவோ பகட்டோ இல்லாமல், எங்கட யாழ்ப்பாணத்து மண்ணில இருந்து கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை வெளிக்கிட்டவையோட சேர்ந்து தானும் யாத்திரை போய்க்கொண்டிருக்கிற எங்கட ஊர் நாயான 'சுப்பிரமணியும்' இப்ப பேமஸாகிட்டுது.

முருகனை சுப்பிரமணியம் எண்டும் கூப்பிடுறவை. அப்பிடி முருகன்ர பேரையே வச்சுக்கொண்டு, பாத யாத்திரை போறவை விடிய வெள்ளென எழும்பி 'அரோகரா...' எண்டு கையைத் தூக்கி கும்பிட்டு நடக்கத் துடங்க, அவைக்கு முன்னால வாலையாட்டிக் கொண்டு ஏதோ அடிக்கடி கதிர்காமம் போய்வந்தவர் மாதிரி சுப்பிரமணி தான் எல்லாருக்கும் வழிகாட்டிக் கொண்டு போகுதாம். கழுத்தில ஒரு சிவப்புப் பட்டுத் துண்டோட களைப்போ சோர்வோ இல்லாமல் மரக்கறிச் சாப்பாட்டோட சுப்பிரமணி கிட்டத்தட்ட 450 கிலோமீற்றருக்கும் கூடவா நடந்திட்டு. இன்னும் கொஞ்சநாளில சுப்பிரமணி கதிர்காமம் மலையிலையிலும் ஏறிடும் எண்டு பாதயாத்திரை போறவை சொல்லுகினம். கதிர்காமக் கந்தன் கொடுத்த அருளால தான் இந்த நாய் இவ்வளவு தூரம் எங்களுக்குத் துணையா வருகுது எண்டு பாதயாத்திரைக்குப் போன எல்லாரும் மெய்சிலிர்க்கினம். இப்ப பம்பல் என்னெண்டால், சுப்பிரமணியின்ர புகழ் எல்லா இடமும் பரவ, அதைப் பாக்கவெண்டே கனபேர் கதிர்காம யாத்திரையில இணைஞ்சிருக்கினம். இப்பிடி பட்டிதொட்டியெல்லாம் புகழ் பரவின சுப்பிரமணிக்கு கண்ணூறு கழிக்கிற மாதிரி கல்முனையில ஒரு சம்பவம் நடந்திட்டுது.

முந்தநாள் சனிக்கிழமை பின்னேரம் கல்முனை மெயின்ரோட்டில, அஷ்ரப் ஆஸ்பத்திரி வழியால பாதயாத்திரைக்காரர் போய்கொண்டிருந்தவை. அப்ப வழக்கம் மாதிரி சுப்பிரமணி அவைக்கு முன்னால பாய்ஞ்சு போய், ஒரு பழக்கடையடியில நிண்டபடி பின்னால பாதயாத்திரைக்காரர் வருகினமோ எண்டு பார்த்துக்கொண்டு நிண்டிருக்கு. அப்ப அந்தப் பழக்கடை வைச்சிருக்கிற பெடியன், ஏதோ கட்டாக்காலி நாயொண்டு வந்து நிக்குது எண்டு நினைச்சோ என்னவோ சுப்பிரமணியின்ர பின்பக்கமா வந்து ஓங்கி உதைஞ்சு போட்டான். அவ்வளவுதான், அப்பிடியே கத்திக்கொண்டு றோட்டில சுருண்டு விழுந்த சுப்பிரமணி வெருண்டுகொண்டு ஓடிப்போய் யாத்திரைக்காரரிட்ட தஞ்சமடைஞ்சிட்டுது. பிறகு யாத்திரைக்காரர் அந்தப் பழக்கடைப் பெடியனுக்கு சுப்பிரமணியைப் பற்றிச் சொல்ல, அவனும் எல்லாரிட்டையும் மன்னிப்புக் கேட்டிருக்கிறான். ஆனால், சுப்பிரமணிக்கு அந்தப் பெடியன் உதைஞ்ச வீடியோ சோசியல் மீடியாக்களில பரவ, "சுப்பிரமணிக்கு நீதிவேணும்" எண்ட குரலும் வலுக்கத் தொடங்கிட்டுது. உடனேயே பொலிஸ்காரர் அந்தப் பெடியனை அரஸ்ட் பண்ணிக்கொண்டு போட்டினம். அதுக்குப் பிறகு 'சுனாமியோட மோது சுப்பிரமணியோட மோதாதே' எண்டு சுப்பிரமணிக்குச் சப்போர்ட்டா சமூகவலைத்தளங்களில ஒரே புகழ்ப் பதிவுகள். எப்பிடியோ அமெரிக்காவுக்கு அலோகா மாதிரி, எங்களுக்குச் சுப்பிரமணி கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





# கதிர்காம பாதயாத்திரைக்குழு அம்பாறைக்குச் சென்றடைவு!

அம்பாறை .ஜூன் 29
வரலாற்றுப் புகழ்மிக்க கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடி வேல் விழாவை முன்னிட்டு, தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து பாதயாத்திரையாகப் புறப்பட்ட குழுவினர், 37 ஆவது நாளான நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அம்பாறை பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயத்தைச் சென்றடைந்தனர்.

இலங்கையின் மிக நீண்டதூரப் பாத யாத்திரையாகக் கருதப்படும் குறித்த பாதயாத்திரையில் 128 பேர் இணைந்துள்ளனர்.

இந்தப் பாதயாத்திரைக் குழுவினருடன் சுப்பிரமணியன் என அழைக்கப்படும் நாயும், முல்லைத்தீவு தண்ணீரூற்றுப் பகுதியிலிருந்து சோர்வின்றித் தொடர்ந்து பயணித்து வருவது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. (சு-66)





வரலாற்று சிறப்புமிக்க சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலய இரதோற்சவம் நேற்று அடியவர்கள் சூழ பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச)

## நினைவஞ்சலியும் அங்குரார்ப்பணமும்

யாழ்ப்பாணம்.ஜூன் 29
நெடுந்தீவு பிரதேச சபை மற்றும் கலைப்பணி மன்றம் நடத்தும் மறைந்த அருட்பணி ப.ஜெறோம் லம்பேட் அடிகளாருக்கான நினைவஞ்சலி நிகழ்வும், நெடுந்தீவு கலைப்பயிலக அங்குரார்ப்பணமும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நெடுந்தீவு கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (க)

## பரிசளிப்பு விழாவும் அங்குரார்ப்பணமும்

யாழ்ப்பாணம்,ஜூன் 29
நயினாதீவு அபிவிருத்திக் கழகம் பிரான்ஸ், நடத்தும் மாணவரின் அறிவு மற்றும் ஆக்கத்திறன் போட்டிப் பரிசளிப்பு விழா மற்றும் நயினாதீவு சமூக சக்திக் குழுவுடன் இணைந்து நடத்தும் சமூகப் பாதுகாப்பு பிரதிலாபத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு ஆகியன நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நயினாதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கழகத் தலைவர் தர்மலிங்கம் சுகந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக செயலர் க.சிவகரன் கலந்து கொள்வார்.(க)

## கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் முயற்சியாண்மை மற்றும் சிறுவணிக முகாமைத்துவ உயர்தர சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே கோரப்பட்டுள்ள நிலையில் அதன் முடிவுத் திகதி மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயதிற்கு மேற்பட்டவராகவும், க.பொ.த. சாதாரண தரத்தில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் முதலாம் மொழி கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தலோடு ஏதாவது இரு திறமைச் சித்திகள் காணப்படவேண்டும். விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னதாக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-41)

## திருவாசகம் முற்றோதலும் அருணகிரிநாதர் குருபூசையும்

யாழ்ப்பாணம்,ஜூன் 29
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில்,மாதாந்தப் பூரணை தினத்தை முன்னிட்டு, திருவாசகம் முற்றோதல் நிகழ்வும், பக்திப் பாசுரங்களைப் பாடித் தமிழ்மொழிக்கும், சைவசமயத்துக்கும் பெருந்தொண்டாற்றிய அருணகிரிநாதர் சுவாமிகள் குருபூசையும் இன்று திங்கட்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். திருவாசகம் முற்றோதல் நிகழ்வு அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து காலை 9 மணிக்கு அருணகிரிநாதர் சுவாமிகளின் குருபூசை இடம்பெறும். நிகழ்வில் இசைக்குயில் கவிதா தில்லைராஜ் குழுவினரின் திருப்புகழ் இசைக்கச்சேரியும், அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (சு-66)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.. தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**இடபம்:** கணவன்-மனைவிக்கி டையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**துலாம்:** வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன்- மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**தனுசு** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும்.

**மகரம்** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத் தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக் கூடும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை





## பொய்யாமொழி

**திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று**

**பொருள்:** தகுதி அல்லாதவைகளைத் தனக்குப் பிறர் செய்த போதிலும், அதனால் அவர்க்கு வரும் துன்பத்திற்காக நொந்து அறம் அல்லாதவற்றைச் செய்யாதிருத்தல் நல்லது.

# ஹிட்லரின் நிழல்களும் ஈழத்தின் புதைகுழிகளும்!

'கடந்தகால ஆட்சியாளர்களின் கீழ் ஹிட்லரின் விசேட இராணுவப் பிரிவுகளைப் போன்ற சட்டவிரோத இராணுவக்குழுக்கள் இயங்கின' என்று பாதுகாப்புப் பிரதியமைச்சர் சுனில் வட்டகல நாடாளுமன்றத்தில் அண்மையில் வெளிப்படுத்தியுள்ள வாக்குமூலம், இலங்கையின் பாதுகாப்புப் பொறிமுறையின் இருண்ட பக்கத்தை அப்பட்டமாகத் தோலுரித்துக்காட்டியுள்ளது. சுரேஷ் சாலே போன்ற அதிகாரிகளின் மீதான விசாரணைகள் அரசியல் பழிவாங்கல்கள் அல்ல, அவை சட்ட பூர்வமானவையே என்று பிரதியமைச்சர் நியாயப்படுத்தியிருந்தாலும், அவர் தொட்டுச் சென்றுள்ள அந்த 'இரகசியப் படைகள்' பற்றிய விவகாரம் சாதாரணமானதல்ல. யுத்த காலத்திலும் அதன் பின்னரும் பேரினவாத அரசுகளின் நிழலில் இயங்கிய இத்தகைய துணை இராணுவக் குழுக்கள் மற்றும் 'வெள்ளை வாகனக்' கடத்தல்படைகள்பற்றிய உண்மைகளை வெளிக்கொண்டுவர வேண்டிய தார்மீகப் பொறுப்பு இப்போது இந்தத் திசைகாட்டி அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது.

இலங்கையின் முந்தைய ஆட்சியாளர்கள் தங்களின் அரசியல் எதிரிகளையும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களையும் ஒடுக்குவதற்காக இத்தகைய சட்டவிரோதப் படைகளைப் பயன்படுத்தினர் என்பது காலம் காலமாகச் சொல்லப்பட்டு வரும் குற்றச்சாட்டாகும். இப்போது அரசாங்கத்தின் உயர் மட்டத்திலிருந்தே இதற்கான ஒப்புதல் வாக்குமூலம் வந்துள்ள நிலையில், இதனை வெறும் அரசியல் மேடைப் பேச்சோடு கடந்து சென்றுவிட முடியாது. இந்தச் சட்டவிரோதத் துணை இராணுவக் குழுக்கள் எவை, அவற்றிற்கு நிதியுதவி அளித்து இயக்கிய சூத்திரதாரிகள் யார் என்பது குறித்து ஒரு விரிவான, நடுநிலையான சர்வதேசத் தரம் வாய்ந்த விசாரணைகள் உடனடியாக நடத்தப்பட வேண்டும். அப்போதுதான், போரின் திரைக்குப்பின்னால் விடை தெரியாமல் உறைந்து போயிருக்கும் பல்லாயிரக்கணக்கான மனிதக் கடத்தல்கள், படுகொலைகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும்.

மண்ணுக்குள் புதைக்கப்படும் உண்மைகள் என்றாவது ஒருநாள் எலும்புக்கூடுகளாக உயிர்த்தெழும் என்பதற்குச் சான்றாக அண்மையில் செம்மணி மனிதப் புதைகுழி உருவெடுத்துள்ளது. பாதுகாப்புப் பிரதியமைச்சர் குறிப்பிடுவதைப் போன்ற ஹிட்லரின் 'நாசிப் படை' பாணியிலான கொடூரப்பிரிவுகள் இங்கு தங்கு தடையின்றி இயங்கியிருப்பது உண்மையானால், முறையான விசாரணைகள் நடத்தப்படும்போது செம்மணியை விடவும் அதிபயங்கரமான இரகசிய மனிதப் புதைகுழிகள் கூட இந்தத் தீவின் பல பாகங்களிலும் வெளிப்படலாம். அந்தப் பயங்கரமான உண்மைகளை எதிர்கொள்ளும் துணிச்சல் தற்போதைய அரசாங்கத்துக்கு இருக்கிறதா என்பதுதான் இப்போது எழுந்துள்ள பிரதான கேள்வியாகும்.

'சட்டத்தின் ஆட்சி' மற்றும் 'மாற்றம்' என்ற தாரக மந்திரங்களுடன் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், முந்தைய ஆட்சிகளின் பவாங்கல்களைப் பற்றிப் பேசுவதோடு நின்றுவிடாமல், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குப் பரிகார நீதியைப் பெற்றுத்தர முன்வர வேண்டும். கடந்த காலத்தின் இத்தகைய அரச பயங்கரவாதக் கட்டமைப்புகள் முற்றாகத் தகர்க்கப்பட்டு, குற்றவாளிகள் கூண்டில் நிறுத்தப்படாத வரை, இந்தத் தேசத்தில் உண்மையான ஜனநாயகமோ அல்லது நல்லிணக்கமோ மலரப் போவதில்லை. எனவே, அரசாங்கம் இந்த விவகாரத்தில் காலத்தோடு தீர்க்கமான முடிவை எடுத்து, சட்டவிரோதப் படைகளின் குற்றங்களை முழுமையாக விசாரிக்க முற்படவேண்டும். இல்லையேல், முன்னைய அரசுகளின் கொடூரங்களை மூடிமறைக்கும் மற்றுமொரு கவசமாகவே இந்தத் திசைகாட்டி அரசும் வரலாற்றில் பார்க்கப்படும்.




டெங்குத் தாண்டவம்

# 52,000 பேர் பாதிப்பு 31 பேர் உயிரிழப்பு!



கொழும்பு, ஜூன் 29

**இலங்கையில் டெங்கு நோய் அதிகரித்துவரும் நிலையில், இந்த வருடத்தில் ஆறு மாத காலப்பகுதிக்குள் 52 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 31 பேர் பலியாகியுள்ளனர்.**

மே மற்றும் ஜூன் மாதங்களில் பாதிப்பு வீதம் இரட்டிப்பாகியுள்ளது. 2026 ஜனவரி முதல் இதுவரையான காலப்பகுதியில் 52 ஆயிரத்து 68 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
ஜூன் மாதத்தில் மாத்திரம் 27 நாள்களுக்குள் 18 ஆயிரத்து 227 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
மேல் மாகாணத்தில் 27 ஆயிரத்து 305 பேரும், தென் மாகாணத்தில் 8 ஆயிரத்து 243 பேரும், கிழக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்து 714 பேரும், வடக்கில் 2 ஆயிரத்து 292 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 124 சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளில் வைரஸ் தொற்று வேகமாக பரவி வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-44)

## கால்வாயில் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூன் 29
சஹஸ்புர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹல்கஹவத்த பகுதியில் உள்ள கால்வாய் ஒன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மிதந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சஹஸ்புர பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.
உயிரிழந்த நபரின் அடையாளம் இதுவரை கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
சடலம் கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சஹஸ்புர பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச-இ)

## ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஐ.ம.ச. உறுப்பினர் சாவு

கொழும்பு, ஜூன் 29
வீரகெட்டியவில் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் நேற்றுமுன்தினம் கொலை செய்யப்பட்டுள்ளார். கொலை செய்யப்பட்ட இளைஞர், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் அம்பாந்தோட்டை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞரணி ஊடக செயலாளருமாக பணியாற்றியவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
விருந்தொன்றின் போது ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதையடுத்து, இந்த நபர் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு அவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.
கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## தானசாலைகள் 18,000 பதிவு

கொழும்பு, ஜூன் 29
பொசன் பௌர்ணமி பண்டிகையை முன்னிட்டு நாடு முழுவதும் 18,000க்கும் மேற்பட்ட தானசாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## நாயைத் துன்புறுத்திய சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஜூன் 29
கதிர்காமப் பாதயாத்திரை அடியார்களுடன் வீதியில் சென்ற நாயை உதைத்துத் துன்புறுத்திய சந்தேகநபர் கல்முனை தலைமையகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பிரதம பரிசோதகருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய நேற்றுமுன்தினம் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
சம்பவம் தொடர்பில் 21 வயது மதிக்கத்தக்க சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த நாய், யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காம பாதயாத்திரையில் ஈடுபட்டு வரும் குழுவினரோடு பயணித்து வரும் 'சுப்பிரமணியன்' எனும் பெயருடைய நாய் என்பதாகும். (ச-இ)



நாளை
செவ்வாய்க்கிழமை-ஆனி 16
30.06.2026
சுபநேரம் : 10.26 – 11.56
ராகுகாலம் : 02.56 – 04.26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாணசபையின் அதிகாரங்களைப் பறித்து நிறைவேறிய சூழலியல் சட்டம் ஆபத்து!

## சவாலுக்கு உட்படுத்தத் தவறிய தமிழ்த் தரப்புகள்

## கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 29

அரசாங்கத்தினால் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தேசிய சூழலியல் (திருத்தச்) சட்டம் அரசியலமைப்புக்கு முரணானது. மாகாணசபைகள் இயங்காத நிலையில் இதனைச் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றியமை முற்றிலும் தவறானது என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாணசபைகளுக்கான அதிகாரங்களைக் குறைப்பதுடன், 13ஆவது திருத்தச் சட்டத்தின் மாகாணசபை அதிகாரங்களுடன் நேரடியாக முரண்படும் விதத்தில் இந்தச் சட்டம் அமைந்துள்ளது.

இந்தச் சட்டமூலத்தில் உள்ள விடயங்கள் மாகாணசபைகளுக்கு உரிய அதிகாரங்களுடன் தொடர்புபட்டிருப்பதனால், அதற்கு மாகாணசபைகளின் அனுமதியைப் பெறுவது கட்டாயமாகும்.

தற்போது இலங்கையில் மாகாணசபைகள் எதுவும் இயங்குநிலையில் இல்லை. இதனால் அவற்றால் இந்தச் சட்டமூலத்துக்கு ஒப்புதல் வழங்க முடியாது. மாகாணசபைகளின் ஒப்புதல் இல்லாத சூழலில், அரசாங்கம் நாடாளுமன்றத்தில் இதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மட்டுமே நிறைவேற்றியிருக்க வேண்டும்.

ஆனால் அரசாங்கம் ஏதோவொரு பழைய நீதிமன்றத் தீர்ப்பைச் சாட்டு கூறி, இதனைச் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றியிருக்கிறது. இது முற்றிலும் தவறான, மாகாணசபை அதிகாரங்களை நசுக்கும் செயலாகும்.

மாகாணசபைகளின் அதிகார வரம்புகளைப் பாதுகாப்பதில் வழமையாக அக்கறையுடன் செயற்பட்டு வரும் தமிழ் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் ஏனைய தரப்புகள், இந்த ஆபத்தான சூழலியல் திருத்தச் சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் உரிய நேரத்தில் சவாலுக்கு உட்படுத்தத் தவறிவிட்டன - என்றார். (ச-இ)





# வடமாகாண மெய்வன்மைப் போட்டியில் மன்னார் சவேரியார் கல்லூரி முதலிடம்!

மன்னார், ஜூன்.29

2026 ஆம் ஆண்டுக்கான வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மை விளையாட்டுப் போட்டிகளில், அதி கூடிய புள்ளிகளைப் பெற்று மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

அதற்கமைவாக 9 தங்கப்பதக்கங்கள், 6 வெள்ளிப்பதக்கங்கள், 6 வெண்கலப்பதக்கங்களைப் பெற்று, 30 இடங்களுடன் 181 புள்ளிகளைத் தம் வசமாக்கி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். 12 வயது வடமாகாண சிறந்த சுவட்டு மற்றும் மைதான சிறந்த வீரனாக, மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த ஆர். ருஷான் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 12,18,20 வயதுப் பிரிவில் வடமாகாணத்தின் சிறந்த மெய்வன்மைப் பாடசாலையாகவும், அஞ்சல் ஓட்டச் சம்பியனாகவும் இந்தக் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 140 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது. 5 தங்கப் பதக்கங்களையும், 8 வெள்ளிப் பதக்கங்களையும், 3 வெண்கலப் பதக்கங்களையும் என மொத்தமாக 16 பதக்கங்களை மாணவர்கள் வென்றெடுத்துள்ளனர். யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி 94 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-66)

# பச்சிலைப்பள்ளி பண்பாட்டு விழா

கிளிநொச்சி, ஜூன் 29

பச்சிலைப்பள்ளி பிரதேச பண்பாட்டு விழா நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு, பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும். பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக, வடக்கு மாகாண பிரதம செயலர் திரு மதிதனுஷா முருகேசன், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் பணிப்பாளர் திருமதி தர்ஷினி நிதர்ஷன் ஆகியோர் கலந்துகொள்வர். நிகழ்வில் கலைஞர்களான அ.தேவசகாயம் (சோரன்பற்றுகூத்து), து. திரவியரத்தினம் (முல்லையடி நாடகம்), சே. சந்திரகுமார் (முகமாலை நாடகம் ) ஆகியோருக்கு கலைத்தென்றல் விருதும், ந.திவாகருக்கு (சோரன்பற்று கூத்து ) இளங்கலைஞர் விருதும் வழங்கப்படும். தொடர்ந்து பண்பாட்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பிரதேசமட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். (க-9)

# விஞ்ஞானமாணி கற்கைக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 29

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி (BACHELOR OF SCIENCE IN INFORMATION TECHNOLOGY 2026/27) கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரு தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் தெரிவுப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் அடிப்படை சான்றிதழ் கற்கை நெறியைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் தெரிவுப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

விண்ணப்பப் படிவங்களை WWW.OU.AC.LK என்ற இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் ஜூலை மாதம் 19ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு யாழ்.பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாகவும், 0212223372 எனும் தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பை மேற்கொண்டு விண்ணப்பிக்க முடியும். (க)



# மாகான சதுரங்கப் போட்டியில் வவுனியா மாணவன் முதலிடம்

பளை, ஜூன்.29

இலங்கை பாடசாலைகள் சதுரங்கச் சங்கத்தின் ஏற்பாட்டில், வட மாகாணமட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட தனிநபர் சதுரங்கப் போட்டியில், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் பிரதீபன் அத்விக் முதலிடத்தைப் பெற்று, மாகாணமட்ட சம்பியனாகத் தெரிவாகியுள்ளார்.

பளை இந்துக்கல்லூரியில் அண்மையில் நடத்தப்பட்ட போட்டியில், வடமாகாணத்தின் பல்வேறு பாகங்களிலிருந்தும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று, தங்களது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர். இதில் 6 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான, போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் பிரதீபன் அத்விக் முதலிடத்தையும், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் பாடசாலையைச் சேர்ந்த ஆர். அட்சரன் இரண்டாம் இடத்தையும், துன்னாலை இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ரி.தஸ்வின் மூன்றாம் இடத்தை பெற்றனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி மோசடிகளைத் தடுப்பதற்கு நொத்தாரிசு சட்டத்தில் திருத்தங்கள்

பதிவாளர் நாயகம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 29**

**வடக்கு மாகாணத்தில் 'வெளிப்படுத்தல் உறுதி' ஊடாக இடம்பெறும் மிகப் பெரிய காணி மோசடிகளைத் தடுக்கும் வகையில் நொத்தாரிசு சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டத்திருத்தங்கள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்டவரைஞர் திணைக்களங்களுடன் விரைவில் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனப் பதிவாளர் நாயகம் திருமதி சசிதேவி ஜலதீபன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனின் விசேட அழைப்பின் பேரில், பதிவாளர் நாயகத்துடனான உயர்மட்டக் கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது வெளிப்படுத்தல் உறுதி ஊடான மோசடிகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் பல முக்கியமான விடயங்களைச் சுட்டிக்காட்டினார். அத்துடன் வலிகாமம் வடக்கில் இராணுவத்தினரிடமிருந்து விடுவிக்கப்பட்ட காணிகள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் மக்களின் காணிகள் கூட இவ்வாறு போலி உறுதிகள் மூலம் அபகரிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் வெளிப்படுத்தல் உறுதி மூலம் காணிகள் பதிவுசெய்யப்படும்போது அதனைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதைக் கட்டாயமாக்கும் சரத்து சட்டத்திருத்தத்தில் உள்ளடக்கப்பட வேண்டுமென வடக்கு மாகாண ஆளுநர் முன்மொழிந்தார்.

இந்த விடயங்கள் தொடர்பில் பதிவாளர் நாயகம் தெரிவிக்கையில், 2022ஆம் ஆண்டு சுற்றறிக்கையின்படி அரச காணியா? என்பதை உறுதிப்படுத்தப் பிரதேச செயலாளர்களுக்கு 3 மாதங்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. தேவையேற்படின் மேலதிக கால நீடிப்பையும் கோர முடியும். பிரதேச செயலகக் காணிப் பயன்பாட்டுக்குழுக் கூட்டங்களில் காணி உரித்துத் திணைக்கள அதிகாரிகளையும் இணைத்துக் கொள்வதன் மூலம் இதற்கான தீர்வுகளை இலகுவாகப் பெறலாம் -என்றார். (ச-இ-66-113)



## மாகாணசபை அதிகாரங்களை நாடாளுமன்று பறிக்கக்கூடாது

ஐ.ம.சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் நாடாளுமன்றத்தால் பறிக்கப்படக் கூடாது. அவ்வாறு இடம்பெற்றால் அது மிகப்பெரும் சட்டச் சிக்கலை நாட்டில் ஏற்படுத்தும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் ஹப்புஹாமி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது- தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம் தொடர்பில் நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக்குழுவில் விரிவாக ஆராய்ந்துள்ளோம். இந்த சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கங்கள், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் உள்ளடக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது. சுற்றுச்சூழல் குறித்து தீர்மானம் எடுக்கும் இணை அதிகாரம் மத்திய அரசுக்கும், மாகாண அரசாங்கத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது. இரு தரப்பின் நடவடிக்கைகளும் இரு தரப்பினாலும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் நாடாளுமன்றத்தால் பறிக்கக் கூடாது. அவ்வாறு இடம்பெற்றால் அது சட்டச் சிக்கலை நாட்டில் ஏற்படுத்தும்- என்றார். (ச-இ)

## ஜனாதிபதியிடம் குவியும் அதிகாரங்கள் பலவீனமடைகின்றது சட்டத்தின் ஆட்சி!

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

தற்போதைய பொதுச்சட்டங்களை மீறிச் செயற்படக்கூடிய பரந்துபட்ட அதிகாரங்கள் ஜனாதிபதியிடத்தில் குவிக்கப்பட்டுள்ளன. இத்தகைய அசாதாரண நடவடிக்கைகள் ஏன் அவசியம் என்பதற்கான தெளிவான விளக்கத்தை அரசாங்கம் வழங்கத் தவறியுள்ளது என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

'டித்வா' சூறாவளியால் ஏற்பட்ட பேரனர்த்தத்தைக் கையாள்வதற்காகப் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலநிலை, அனர்த்தம் நடந்து 6 மாதங்கள் கடந்த் நிலையிலும் தொடர்ச்சியாக நீடிக்கப்படுகின்றது. 'டித்வா' சூறாவளிப் பேரனர்த்தத்தைக் கையாள்வதற்காகக் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதன்முதலில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. எனினும், கடந்த ஆண்டு டிசெம்பரில் வெளியிடப்பட்ட அவசரகால நடைமுறைகளுக்கும் இயற்கைப் பேரனர்த்தத்துக்கும் எவ்வித தொடர்பும் இருக்கவில்லை. அவசரகாலநிலைப் பிரகடனத்தின் மூலம் வழங்கப்படும் அதிகாரங்கள், மிக அவசியமான இறுதி உத்தியாக, வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்கு மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டியவையாகும். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## போதைப்பொருள் வியாபாரியின் ஆடம்பரச் சொத்துகள் முடக்கம்!

யாழ். மேல் நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 29

கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரம் மூலம் சட்டவிரோதமாகப் பணம் உழைத்து உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வந்த பிரதான சந்தேகநபர் ஒருவரின் ஆடம்பர சொத்துகளை 'பணத் தூய்மையாக்கல் தடுப்புச் சட்டத்தின்' கீழ் முடக்குவதற்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சந்தேகநபரின் ஆடம்பர வாகனங்கள் மற்றும் படகு உள்ளிட்ட பல கோடி ரூபா பெறுமதியான சொத்துகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி சி. சதீஸ்தரன் முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் வழிகாட்டுதலின்கீழ், அரச சட்டவாதிகளான கா. நசிகேதன் மற்றும் ஆறுமுகம் தனுஷன் ஆகியோர் நீதிமன்றில் ஆஜராகிக் கடுமையான வாதங்களை முன்வைத்தனர்.

குற்றச்செயல்கள் மூலம் சொத்துச் சேர்த்த நபர்கள் மீதான வழக்குகள் நீதிமன்றில் முடிவடைவதற்கு நீண்ட காலம் எடுக்கலாம். அதுவரை அவர்கள் அந்தப் பணத்தில் சொகுசு வாழ்க்கை வாழ்வதையோ அல்லது சொத்துகளை அனுபவிப்பதையோ சட்டம் அனுமதிக்கக்கூடாது.

குறிப்பிட்ட சந்தேகநபர் எந்தவொரு நிரந்தரத் தொழிலும் செய்யாதவர். அப்படியிருக்கையில், அவரால் இவ்வளவு சொத்துகளையோ, சொகுசு வாகனங்களையோ, படகுகளையோ கொள்வனவு செய்ய சட்டபூர்வமாக எவ்வித வாய்ப்பும் இல்லை. இவை அனைத்தும் குற்றப்பணமே. சந்தேகநபரின் முந்தைய குற்றப் பின்னணிகளை ஆதாரங்களுடன் சமர்ப்பித்த சட்டவாதிகள், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விரிவான விசாரணைகளை எவ்வித தடையுமின்றித் தொடர்ந்து கொண்டு செல்வதற்கு இந்தச் சொத்துகள் முடக்கப்படவேண்டியது அவசியமென சுட்டிக்காட்டினர்.

அரச சட்டவாதிகளின் சட்டரீதியான சமர்ப்பணங்களை ஏற்றுக்கொண்ட யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி சி.சதீஸ்தரன், வழக்கு முடியும் வரை சந்தேகநபரின் சொகுசு வாகனங்கள், படகு உள்ளிட்ட அனைத்துச் சொத்துகளையும் உடனடியாக முடக்குமாறு கட்டளையிட்டார். (ச-66)

## தருமபுரத்துக்கு புதிய ஆயுள்வேத நிலையம்

கிளிநொச்சி, ஜூன் 29

கரைச்சிப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட தருமபுரத்தில், 24 மில்லியன் ரூபா செலவில், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆயுள்வேத வைத்தியசாலை மக்கள் பயன்பாட்டுக்கு கடந்த திங்கட்கிழமை திறக்கப்பட் டது. நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

நிகழ்வில், கிளிநொச்சி மாவட்டச் செயலர், கண்டாவளைப் பிரதேச செயலர், உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர், பிரதேசசபைகளின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், தருமபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (க-55)



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# 1,000 தொல்பொருள் தளங்களை பாதுகாப்பதற்கு விசேட திட்டம்!

**கொழும்பு, ஜூன் 29**
**இலங்கையின் வரலாற்றுப் பெருமைகளையும் பண்பாட்டு அடையாளங்களையும் பாதுகாக்கும் நோக்கில், நாடளாவிய ரீதியில் உள்ள 1,000 தொல்பொருள் தளங்களை மறுசீரமைத்துப் பாதுகாப்பதற்கான மாபெரும் தேசியத் திட்டமொன்றைத் தொல்பொருளியல் திணைக்களம் அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் விக்கிரமசிங்க தெரிவிக்கையில்,

நாட்டின் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக 'உருமய ஜீவயக' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விசேட தூரநோக்குத் திட்டம், எதிர்வரும் ஜூலை மாதம் 7ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள தேசிய தொல்பொருள் தினத்தை முன்னிட்டு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக, உடனடிப் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு தேவைப்படும் மிக முக்கியமான 100 தொல்பொருள் தளங்கள் தெரிவு செய்யப்பட்டு, அங்கு அகழ்வாராய்ச்சிகள் மற்றும் பாதுகாப்புப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தொல்பொருள் தளங்களை வெறுமனே அரசாங்கம் மட்டும் பாதுகாக்காமல், அந்தந்தப் பகுதிகளில் உள்ள உள்ளூர்ச் சமூகங்களின் பங்களிப்பையும் விழிப்புணர்வையும் ஊக்குவிப்பதற்கான மற்றொரு இணைத்திட்டமும் இதனுடன் சேர்த்துச் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இலங்கையின் பின்தங்கிய மற்றும் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் முறையான பராமரிப்பின்றி அழிந்து வரும் வரலாற்றுத் தளங்கள், கல்வெட்டுகள், பௌத்த மற்றும் ஏனைய மத வழிபாட்டுத் தலங்களின் எச்சங்கள் ஆகியவற்றைச் சட்டவிரோத அகழ்வாராய்ச்சியாளர்கள் மற்றும் நிதிக்கடத்தல்காரர்களிடம் இருந்து மீட்டெடுத்துப் பாதுகாப்பதே இந்த 'உருமய ஜீவயக' திட்டத்தின் முதன்மை நோக்கமாகும் - என்றார். (ச-இ)



# புதிய வைரஸ் காரணமாகவே டெங்குப் பரவல் அதிகரிப்பு!

### ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29
நாட்டில் தற்போது புதிய வகை டெங்கு வைரஸ் ஒன்று பரவி வருவதன் காரணமாகவே, அண்மைக்காலமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய வைரஸ் தாக்கத்தினால் டெங்குப் பரவல் மிக வேகமாக அதிகரித்த போதிலும், அரசாங்கத்தினால் உடனடியாக முன்னெடுக்கப்பட்ட விசேட ஒழிப்பு வேலைத்திட்டங்கள் காரணமாகத் தற்போது அதன் பரவலில் ஓரளவுக்குக் குறைவு ஏற்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டமே டெங்கினால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மகரகம மற்றும் கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் இதன் பரவல் மிக அதிகமாகக் காணப்படுகிறது.

பாடசாலைகள், அலுவலக வளாகங்கள் மற்றும் பாழடைந்த வெற்று நிலங்களில் நுளம்புப் பெருக்கம் தீவிரமாக உள்ளது. நுளம்பு பெருகும் இடங்களை வைத்துள்ள நிறுவனங்கள் மற்றும் நில உரிமையாளர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-இ)



# கைதான சரித் அபேசிங்கவின் கட்சி உறுப்புரிமை பறிப்பு

கொழும்பு, ஜூன் 29
இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சரித் அபேசிங்கவின் கட்சி உறுப்புரிமையை ஐக்கிய மக்கள் சக்தி இரத்துச் செய்துள்ளது.

கட்சியின் ஹொரண தொகுதி அமைப்பாளர் உட்பட அவர் வகித்த அனைத்துப் பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஊழல் அல்லது ஏதேனும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதையோ அல்லது நீதித்துறைச் செயல்முறைகள் முன்னெடுக்கப்படுவதையோ ஐக்கிய மக்கள் சக்தி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எதிர்க்காது என்றும் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டினார். (ச-44)

# ஞானசாரதேரர் வழக்கு ஜூலைக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 29
இஸ்லாமிய மதத்துக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பொது பல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரருக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, ஜூலை 31ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பிரதிவாதியான ஞானசார தேரர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார். இஸ்லாமிய மதத்திற்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்துகளை வெளியிட்டதன் மூலம் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை மீறும் வகையில் செயற்பட்டதாகக் குற்றஞ்சாட்டியே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ச-இ)



# அரசின் அரசியல் நாடகமற்ற விசாரணைகளுக்கு ஆதரவு!

### ஐ.ம.சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29
போதைப்பொருள் மற்றும் பாதாளக்குழு என்பவற்றை ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாக எதிர்க்கின்றது. அரசியல் நாடகம், கண்காட்சி இன்றி இடம்பெறும் சுயாதீன விசாணைக்கு முழு ஆதரவு வழங்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு கட்சி, இனம், மதம் என்பது கிடையாது. ஜே.வி.பி.யுடன் தொடர்புடையவர்களின் பிள்ளைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். எனவே, தவறு இடம்பெற்றிருந்தால் நிச்சயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதற்கு நாம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குவோம். கைதுசெய்யப்பட்டுள்ள எமது கட்சி உறுப்பினரின், உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. கட்சிக்குள் விசாரணை ஆரம்பமாகியுள்ளது. ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் இம்ராஹிமுக்கு எதிராக ஜே.வி.பி. கட்சிஉறுப்புரிமையை நீக்க வில்லை. தற்போதைய அமைச்சர்கள் சிலருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுகள் உள்ளன. அவர்கள் தொடர்பிலும் நடவடிக்கை இல்லை. அரசியல் நாடகமற்ற சுயாதீன விசாரணைக்கு முழு ஆதரவு வழங்கப்படும் - என்றார். (ச-44)

# போதைமாத்திரைகளுடன் நிலாவரையில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 29
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிலாவரைப் பகுதியில் போதைமாத்திரைகளுடன் கடந்த வெள்ளிக்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் 23 வயதுடையவராவார்.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தின் உப பொலிஸ் பரிசோதகர் சதீஷ் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே சந்தேகநபரின் உடைமையிலிருந்து 10 போதைமாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-23)

# தானசாலைகளில் பிளாஸ்ரிக் தடை

கொழும்பு, ஜூன் 29
எதிர்வரும் பொசன் பண்டிகையை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தானசாலைகளில் உணவு மற்றும் பானங்களைப் பரிமாறும்போது பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பயன்படுத்துவதைத் முழுமையாகத் தவிர்க்குமாறு பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. எனவே பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் கொள்கலன்களில் சூடான உணவு மற்றும் பானங்களைப் பரிமாறும் தானசாலைகளுக்கு எதிராக சுகாதார அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இலங்கை பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் சங்கத்தின் பதில் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# நிலநடுக்கத்தால் புதையுண்ட 51 ஆயிரம் பேர் 'அதோகதியா'?

**கராகஸ், ஜீன் 29**
**தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் நிலநடுக்கம் ஏற்பட்டு நான்கு நாள்களாகியும் மீட்புப் பணிகள் நிறைவடையாததால், மாயமான 51,000க்கும் மேற்பட்டோரின் நிலை குறித்துப் பெரும் அச்சம் எழுந்துள்ளது.**

இந்நிலநடுக்கத்தால் லா குவைரா பகுதியே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இங்கு 250க்கும் மேற்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளும் வீடுகளும் அடியோடு சரிந்து தரைமட்டமாகியுள்ளன. தற்போதைய நிலைவரப்படி பலியானோரின் எண்ணிக்கை 1,430 ஆக உயர்ந்துள்ளதுடன், 3,360 பேர் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுவாக இடிபாடுகளுக்குள் சிக்கியிருப்பவர்கள் உயிர் பிழைத்திருப்பதற்கான 'தங்கக் காலம்' எனப்படும் 48 முதல் 72 மணிநேரம் கடந்துவிட்டதால், நேரம் செல்லச் செல்ல உறவினர்களின் பதற்றம் மரண பயமாக மாறியுள்ளது. இதனால் பொறுமையிழந்த பொதுமக்கள், மீட்புக்குழுவினருக்காகக் காத்திராமல் கைகளாலேயே இடிபாடுகளை அகற்றித் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர். இதுவரை 243 பேர் இவ்வாறு உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குள் பொதுமக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், கூட்டம் கூட்டமாக நுழைவதால் மீட்புப் பணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால், இடிபாடுகளுக்கு அடியிலிருந்து வரும் மெல்லிய சத்தங்களைக்கூடக் கேட்க முடியாமல் மீட்புக்குழுவினர் பெரும் திண்டாட்டத்துக்கு உள்ளாகியுள்ளனர். (அ)

## பாகிஸ்தான் - கராச்சியில் தற்கொலைத் தாக்குதலால் 6 படையினர் பலி!

கராச்சி, ஜூன் 29
பாகிஸ்தானின் கராச்சி நகரில் உள்ள துணை இராணுவப் படையான 'சிந்து ரேஞ்சர்ஸ்' வளாகத்தின் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 4 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில், வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட வாகனம் ஒன்று இராணுவ வளாகத்தின் மீதுமோதி வெடித்தது. குண்டுவெடித்த அதிர்ச்சியில் வளாகம் அதிரவே, உள்ளே புகுந்த தாக்குதலாளிகள் கைக்குண்டுகளை வீசியும், துப்பாக்கிகளால் கண்மூடித்தனமாகச் சுட்டும் அடுத்தடுத்து தாக்குதலில் ஈடுபட்டனர். இதனையடுத்து இராணுவத்தினர், தாக்குதலாளிக்கு எதிராகக் கடுமையான பதிலடித் தாக்குதலைத் தொடுத்தனர். சம்பவ இடத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் உடனடியாக இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு வீதிகள் 'சீல்' வைக்கப்பட்டன. சுமார் 90 நிமிடங்கள் நீடித்த இந்தத் துப்பாக்கிச் சமரில் 6 தாக்குதலாளிகள் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், காயமடைந்த ஒருவர் உயிருடன் பிடிபட்டுள்ளார். பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட 'தெஹ்ரீக்இதாலிபான்' அமைப்பின் 'ஜமாத்உல்அஹ்ரார்' என்ற பிரிவைச் சேர்ந்தவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)



## ஈரான் மீது வான்தாக்குதல்!

வோஷிங்டன், ஜூன் 29
ஹோர்மூஸ் நீரிணைக்கு அருகே எண்ணெய்க் கப்பல் மீது ஈரான் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலுக்குப் பதிலடியாக, அமெரிக்க அதிபர் ட்ரம்பின் அதிரடி உத்தரவின் பேரில் ஈரான் மீது அமெரிக்க வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.

ஹோர்மூஸ் நீரிணை, அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள ஈரானின் ஏவுகணை மற்றும் ட்ரோன் தளங்கள், கடலோர ரேடர்கள் உட்பட மொத்தம் 10 முக்கியமான இராணுவ இலக்குகளைக் குறிவைத்து அமெரிக்கப் போர் விமானங்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக அமெரிக்க மத்தியப் படை தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து ஈரானுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ள ட்ரம்ப்,"போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஈரான் மீண்டும் மீறியதாலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நாம் இனிமேலும் பொறுமையாக இருக்க முடியாது. ஒருவேளை இராணுவ ரீதியாக இந்தப் பணியை முடிக்க நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டால், அதன் பின் உலக வரைபடத்தில் ஈரான் என்ற ஒரு நாடே இருக்காது! மீண்டும் போர் நிறுத்தம் மீறப்பட்டால் இராணுவ நடவடிக்கை தொடரும்" என அதிரடியாகப் பதிவிட்டுள்ளார். (அ)



## உக்ரைனும் ரஷ்யாவும் உக்கிர 'ட்ரோன்' போர்!

மொஸ்கோ, ஜூன் 29
கிழக்கு ஐரோப்பிய நாடுகளான உக்ரைன் - ரஷ்யா இடையே நான்கு ஆண்டுகளுக்கும் மேலாகப் போர் நீடித்து வரும் நிலையில், இதுவரை இல்லாத அளவிலான மிகப்பெரிய 'ட்ரோன்' தாக்குதலை ரஷ்யா மீது உக்ரைன் நடத்தியுள்ளது.

ரஷ்யா மற்றும் அதன் கட்டுப்பாட்டிலுள்ள கிரீமியா பகுதிகளை இலக்காக வைத்து, ஒரே நேரத்தில் 600க்கும் மேற்பட்ட ட்ரோன்களை ஏவி உக்ரைன் இந்த அதிரடித் தாக்குதலை முன்னெடுத்துள்ளது. எனினும், உக்ரைன் ஏவிய ட்ரோன்களில் பெரும்பாலானவற்றைத் தங்களின் வான் பாதுகாப்பு மண்டலம் மூலம் இடைமறித்து அழித்துவிட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. இதற்கிடையே, உக்ரைனின் இந்தத் தாக்குதலுக்கு ரஷ்யாவும் ஏவுகணைகள் மூலம் உக்கிரமான பதிலடி கொடுத்துள்ளது. ரஷ்யா ஏவிய 189 ட்ரோன்களில், 174 ட்ரோன்களைத் தாங்கள் சுட்டு வீழ்த்தியதாக உக்ரைன் குறிப்பிட்டாலும், ரஷ்யாவின் அதிபயங்கர 'இஸ்கந்தர்-எம்' பாலிஸ்டிக் ஏவுகணைகளில் நான்கு, உக்ரைனின் வான்பாதுகாப்பைத் தகர்த்துப் பல்வேறு பகுதிகளைத் தாக்கியுள்ளன.

ரஷ்யா நடத்திய இந்த அதிரடிப் பதில் தாக்குதலில் உக்ரைன் தரப்பில் இருவர் பலியாகியுள்ளனர். இரு நாடுகளும் வரலாற்றில் இல்லாத வகையில் மாறி மாறி ட்ரோன் மற்றும் ஏவுகணைகளை வீசி வருவதால் போர் வலயத்தில் பதற்றம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. (அ)




## இடிபாடுகளுக்குள் பச்சிளம் சிசு மீட்பு!

கராகஸ், ஜூன் 29
நிலநடுக்கப் பேரழிவால் நிலைகுலைந்துள்ள வெனிசுலாவில், இடிந்து விழுந்த கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 18 நாள்களேயான பச்சிளம் குழந்தை ஒன்று, 32 மணி நேரப் போராட்டத்துக்குப் பின் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 32 மணி நேரம் இடிபாடுகளுக்கு நடுவே உணவு, தண்ணீர் இன்றிப் போராடிய அந்தக்குழந்தையை, மீட்புக்குழுவினர் பத்திரமாக வெளியே எடுத்தனர். அவ்வளவு பெரிய இடிபாடுகளுக்குள் இத்தனை மணி நேரம் சிக்கியிருந்தபோதிலும், அக்குழந்தைக்கு ஒரு சிறு கீறல்கூட ஏற்படவில்லை என்பது ஒட்டுமொத்த மருத்துவ உலகையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இந்த நெகிழ்ச்சியின் உச்சமாக, குழந்தை மீட்கப்பட்ட 90 நிமிடங்களிலேயே, அதே இடத்திலிருந்து குழந்தையின் தாயாரும் உயிருடன் மீட்கப்பட்டார். மரணத்தின் விளிம்பிலிருந்து தாயும் சேயும் மீட்கப்பட்ட இந்த அதிசய நிகழ்வு, இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள தங்களின் உறவினர்களைத் தேடி வரும் பொதுமக்களிடையே பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (சு-66)

# போஷாக்குக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 29

பளை சுகாதார மருத்துவ அதிகாரி பணியக ஏற்பாட்டில் தேசிய போசாக்கு மாதத்தை ஒட்டிய ஆரோக்கியமான போசாக்கு உணவுப் பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு அண்மையில் கிளாலி வளர்மதி முன்பள்ளியில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுகாதார அதிகாரி, பொதுச் சுகாதார மருத்துவ மாது, கிராம உத்தியோகத்தர், சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் பெற்றோர், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-9)








வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சனிப்பிரதோச விரத உற்சவம் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நகுலேஸ்வரப் பெருமான் பிரதோச மூர்த்தியாக அதிகாரநந்தி வாகனத்தில் உள்வீதி உலா வந்தார். (சு-66)

கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வு நடைபெற்றது. அதில் பொலிஸ் அதிகாரிகள், அதிபர், ஆசிரியர்கள், கிராம உத்தியோகத்தர், பொது மக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-9)





# டிஜிற்றல் தொழில்நுட்பங்கள் விழிப்புணர்வு அறிவுப்பகிர்வு

கிளிநொச்சி, ஜூன் 29

பொதுத்துறை தொலைதூர சேவை வழங்கல்களில் டிஜிற்றல் தொழில்நுட்பங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கான இடைக்கால வழிகாட்டுதல்கள் தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு அறிவுப்பகிர்வு நிகழ்ச்சித்திட்டம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அறிவுப்பகிர்வில் கூட்டங்கள் மற்றும் மெய்நிகர் ஒத்துழைப்பு மற்றும் தொலைதூரப் பணிக்கான இலத்திரனியல் ஆவணங்கள் மற்றும் கையொப்பங்களைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள், ஆவணப் பகிர்வு மற்றும் பரிமாற்றம் போன்ற விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

அறிவுப்பகிர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் வளவாளராக் கிளிநொச்சி மாவட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் திருமதி தனுஜா நிரோஜன் கலந்துகொண்டு தெளிவுபடுத்தியிருந்தார். (ச)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக விதாதா பிரிவின் ஏற்பாட்டில் சிறுதொழில் முயற்சியாளருக்கான பாத்திரம் கழுவும் திரவம் தயாரிப்பதற்கான பயிற்சிநெறி அண்மையில் மாசார் கிராமத்தில் நடைபெற்றது. நிகழவுக்கு வளவாளராக பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக விதாதா உத்தியோகத்தர் கலந்துகொண்டார். (ச-9)





# சர்வதேச ஸ்கேற்றிங் விரைவோட்டம் பதக்கங்கள் வென்ற யாழ். மாணவி!

யாழ்ப்பாணம், ஜூன் 29

மாலைதீவில் நடைபெற்ற சர்வதேச அளவிலான ஸ்கேற்றிங் விரைவோட்டம் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து ஒரே ஒரு மாணவியாக சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் தரம் 9 இல் கல்விகற்கும் மாணவி ஷாருதி தர்மரூபன் பங்குபற்றி இரண்டு வெள்ளிப்பதக்கங்களையும் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் வென்று பெருமை சேர்த்துள்ளார்.

100 மீற்றர் சாலைப் போட்டி மற்றும் 500 மீற்றர் சாலைப் போட்டிகளில் இரண்டாம் இடத்தையும், 500 மீற்றர் தடகளப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்று தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார். இதனையொட்டி யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் அவர் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 11 . 1955

மறைவு 28 . 06 . 2026

### செல்வராசா செல்வரதி

தொல்புரம் வழக்கம்பரையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா செல்வரதி நேற்று (28.06.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - பரமேஸ்வரி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - சிந்தாமணிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சாந்தியின் அன்புத் தாயாரும், கருணேசின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற நாகேந்திரம் இராசேந்திரம், புஸ்பரதி ஆகியோரின் சகோதரியும், ஆனந்தராசா, சிறிஸ்கந்தராசா, லீலாவதி, சிவராசா, லிங்கராசா, மனோகரராசா, பத்மாவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2026) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(CR 47763)A

வழக்கம்பரை,
தொல்புரம்.

தகவல்:
குடும்பத்தினர்
(077 498 7434)

## மரண அறிவித்தல்



பிறப்பு : 19.04.1952

இறப்பு: 28.06.2026

### டெனிஸ் சந்திர போல்

பெரியபுலம் வீதி, நாரந்தனை வடக்கு, நாரந்தனையை பிறப்பிடமாகவும், ஜேர்மனி மற்றும் நாரந்தனையை வாழ்விடமாகவும் கொண்டவருமான டெனிஸ் சந்திர போல் அவர்கள் நேற்று (28.06.2026) ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப் இக்னேசியஸ் புஸ்பம் தம்பதியரின் பாசமிகு மகனும், றோஸ் பூமணியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும், நொய்லின் ஜெயந்தியின் (ஜேர்மனி) பாசமிகு தந்தையும், ஜெனற் (கீதா-ஜேர்மனி), அனற் (யகிதா-லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், யேசுதாசன் (ஜேர்மனி), புறுனோ எரிக் (லண்டன்) ஆகியோலின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (29.06.2026) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நாரந்தனை வடக்கு, நாரந்தனை இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்க ஆராதனையுடன் நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 32070)A

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 06 . 1931

இறப்பு 28 . 06 . 2026

### செல்லையா பரஞ்சோதி

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)

துன்னாலை தெற்கு, சந்திரவளவினைப் பிறப்பிடமாகவும், நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலைய வீதியை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா பரஞ்சோதி அவர்கள் நேற்று (28.06.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னாச்சி தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லாச்சி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, இரட்ணசிங்கம், செகராஜசேகரம் மற்றும் தம்மையா, பரராசசேகரம், பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை, செல்லம்மா, பரமேஸ்வரி, ஞானசேகரம் மற்றும் பாக்கியம், தங்கராணி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பாலநந்தினி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பாலகௌரி (நோர்வே), பாலபவான் (அதிபர் - மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), பாலகரன் (சமுர்த்தி முகாமையாளர், கச்சேரி - யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற பாலகணேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரம் (மகலட்சுமி நகைமாடம் - நெல்லியடி), ஜீவராசா (நோர்வே), புஸ்பதேவி (உதவி அஞ்சல் அத்தியட்சகர், பிரதம அஞ்சல் அலுவலகம் - கிளிநொச்சி), ரஞ்சினி (ஆசிரியர் - கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், நீலவாணன் (QS), ராகவன் (மாணவர், B.Sc), ரஜீவன் (நோர்வே), கௌசிபன் (நோர்வே), அக்ஷயா (நோர்வே), கௌசிகா (நோர்வே), கஜானி (Data analyst, Appigo), பிரார்த்தனா (BSMS - மாணவி), பிரசாந் (மாணவன், ECS, களனி பல்கலைக்கழகம்), சாஜிரூபன் (மாணவன்,கல்வியியற்கல்லூரி - வவுனியா), சஜானன் (MBBS - மாணவன், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), சஜார்த்தன் (MBBS - மாணவன், கொழும்பு பல்கலைக்கழகம்), , வத்சஜா (மாணவி - யா/ இந்துக் மகளிர் கல்லூரி), சிந்துஜா (இயன் மருத்துவ உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புப் பேரனும், விஷாகனின் அன்புப் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2026) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிட்டிது இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 763 0290, 076 925 2218

தகவல்:
குடும்பத்தினர்

(CR 477761) N-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 12 . 1952

மறைவு 25 . 06 . 2026

### சாமஸ்ரீ தேசஜோதி A.N.S. திருச்செல்வம் J.P

(கலாபூஷனம், ஊடகமாமணி, தேசோதய தீபம், கலைமாமணி, கலைப்பரிதி, கலைகலசம், சமூக திலகம், சமூகசுடர், வாழ்நாள் பத்திரிகையாளன்,

(சிரேஷ்ட ஊடகவியலாளர், உள்ளூராட்சி ஓய்வுநிலை நூலகர்)

பருத்தித்துறை வராத்துப்பளையினைப் பிறப்பிடமாகவும், புற்றளையினை வசிப்பிட மாகவும் கொண்ட A.N.S. திருச்செல்வம் அவர்கள் 25.06.2026 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சாந்தாதேவி அவர்களின் அன்புக் கணவரும், அருணா (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம் வடமராட்சி கிழக்கு), சிவதேவன் (பிரான்ஸ்), அபிரா (வைத்தியர்-ஆதார வைத்தியசாலை - பருத்தித்துறை), கிரிசா (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட நீதிமன்றம் - பருத்தித்துறை), துவாரகன் (உதவி அஞ்சல் அதிபர்-வல்வெட்டித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரமோகன் (இலங்கை முதலீட்டுசபை - யாழ்ப்பாணம்), நிருஷா (பிரான்ஸ்), டினேஸ்குமார் (வைத்தியர்- பெல்றஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சறோஜினிதேவி, யோகேஸ்வரி, காலஞ்சென்றவரான சூரியகுமாரி, சாந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நேகா (பிரான்ஸ்), ஷக்ஸி (பிரான்ஸ்), அஸ்விதன் (புற்றளை), அஷ்மிதன் (புற்றளை) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (30.06.2026) செவ்வாய்கிழமை காலை 07:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மு.ப 10:00 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்துமயானத்திற்க்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(CR 47762)A

தொடர்புகளுக்கு:
(தி.துவாரகன் (மகன்)- 0767353106)
புற்றளை, புலோலி

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடங்கும் கதிரியக்கச் சிகிச்சை புற்றுநோய் நோயாளிகள் அவதி!



**கொழும்பு, ஜூன் 29**

**அரச சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நிர்வாகக் குறைபாடுகள் மற்றும் கதிரியக்கச் சிகிச்சை சேவைகளின் பின்னடைவுகள் காரணமாக, நாடு முழுவதிலும் உள்ள சுமார் 100 புற்றுநோய் நோயாளிகள் தங்களது அத்தியாவசிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் கடுமையான உயிர் ஆபத்துகளை எதிர்கொண்டுள்ளதாகச் சுகாதாரத் தொழில்வல்லுநர்களின் சங்கம் எச்சரித்துள்ளது.**


இது குறித்து சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவிக்கையில், புற்றுநோயாளிகளுக்கான கதிரியக்கச் சிகிச்சைத் திட்டமிடலுக்குப் பயன்படுத்தப்படும் பழைய 'சிரி சிமுலேஷன்' இயந்திரம் கடந்த ஏப்ரல் 29 அன்று முழுமையாகச் செயலிழந்தது. இதனைத் தொடர்ந்து, கடந்த மே 21ஆம் திகதி புதிய 'சிரி சிமுலேஷன்' இயந்திரம் ஒன்று கொண்டுவரப்பட்டுப் பொருத்தப்பட்டது. ஆனால், அந்த அதிநவீன இயந்திரம் நிறுவப்பட்ட கட்டடத்தின் கூரையிலிருந்து தொடர்ச்சியாக நீர் கசிந்ததன் காரணமாக, புதிய இயந்திரத்தைப் பயன்படுத்த முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. இந்தத் தாமதம் காரணமாக ஏற்கனவே முதற்கட்டக் கீமோதெரபி, சத்திரசிகிச்சைகள் மற்றும் இதர ஆரம்பக்கட்ட சிகிச்சைகளை முடித்துவிட்டு, அடுத்தகட்டமாகக் கதிரியக்கச் சிகிச்சைக்காகக் காத்திருந்த 1,000க்கும் மேற்பட்ட நோயாளிகள் நீண்ட காத்திருப்புப் பட்டியல்களில் வைக்கப்பட்டுள்ளனர். உரிய காலத்தில் கதிரியக்கச்சிகிச்சை வழங்கப்படாமல் தள்ளிப்போடப்படுவதால், அவர்களுக்கு மீண்டும் புற்றுநோய் செல்கள் தீவிரமாகப் பரவும் ஆபத்து அதிகரித்துள்ளது. இலங்கையில் மகரகம, கொழும்பு, கண்டி, காலி, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட குறிப்பிட்ட சில பிரதான மத்திய நிலையங்களில் மாத்திரமே கதிரியக்கச் சிகிச்சை வசதிகள் உள்ளன. எனவே, ஒரு பிரதான மையத்தில் ஏற்படும் இத்தகைய குளறுபடிகள் மற்றும் தாமதங்கள், சங்கிலித் தொடராக நாடு முழுவதிலும் உள்ள ஒட்டுமொத்த புற்றுநோய் நோயாளிகளையும் கடுமையாகப் பாதிக்கும்- என்றார். (ச-இ)

## நெடுந்தீவு மருத்துவமனைக்கு சுகாதார அமைச்சர் விஜயம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

நெடுந்தீவு பிரதேச மருத்துவமனைக்கு கண்காணிப்பு விஜயத்தை சுகாதார அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜதிஸ்ஸ நேற்று மேற்கொண்டார். இதன்போது மருத்துவமனையின் தேவைப்பாடுகள் தொடர்பில் பிரதேச மருத்துவ பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடிய அமைச்சர், தீவில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் முன்னெடுக்கப்பட வேண்டிய அவசிய தேவைகள் தொடர்பிலும் பிரதேசசெயலரிடம் கேட்டறிந்துகொண்டார். (ச)





## காலநிலைச் சவால்கள் கிளிநொச்சியில் ஆராய்வு

கிளிநொச்சி, ஜூன் 29

சமூகங்களின் அனுபவங்கள் மற்றும் பாரம்பரியத் தகவல்களை ஒருங்கிணைத்து, காலநிலை இடர் குறைப்பு மற்றும் சமூக மீள்திறனைக் கட்டியெழுப்பும் நோக்கிலான சர்வதேச நிதியுதவித் திட்ட முன்மொழிவுக்கான விசேட மாவட்டமட்டக் கலந்துரையாடல் கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எஸ். மோகனபவன் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தத் திட்டமானது, 'பிரஜாசக்தி தேசிய இயக்கத்தில்' ஈடுபட்டுள்ள நாட்டின் மிகவும் நலிவடைந்த மற்றும் பின்தங்கிய சமூகங்களின் காலநிலை மீள்திறனையும், தகவமைப்புத் திறனையும் வலுப்படுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக இலங்கை முழுவதிலும் இருந்து 8 மாவட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றில் கிளிநொச்சி மாவட்டமும் உள்ளீர்க்கப்பட்டுள்ளது. கலந்துரையாடலில் யு.என்.டி.பி. அமைப்பின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அசோக அஜந்த, கரைச்சிப் பிரதேச செயலாளர் த. முகுந்தன், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சுகந்தினி செந்தில்குமரன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் எம். அழகக்கோன், பிரதேச செயலகங்களின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் உள்ளூர் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டு கிளிநொச்சி மாவட்டத்துக்குத் தேவையான காலநிலைத் திட்டங்கள் குறித்து தங்களின் ஆலோசனைகளை வழங்கினர். (ச)

## கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நூற்றாண்டையொட்டி மரநடுகை



கிளிநொச்சி, ஜூன் 29

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் நூற்றாண்டை நோக்கிய பயணத்தில் பசுமைப் போர்வையை உருவாக்கும் நோக்கில் பாடசாலையின் முன்புறத்தில் மரநடுகை நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு. முரளிதரன், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் மோகனதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)



# மன்னார் குடிதண்ணீர் விநியோகம்; காற்றாலை நிறுவனம் நிதியுதவி!

மன்னார் , ஜூன் 29

மன்னார் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச மக்களின் நீண்டகாலக் குடிநீர் விநியோகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில், 'HayWind One Limited' நிறுவனத்தினால் ரூபா 9.2 மில்லியன் பெறுமதியான காசோலை மன்னார் மாவட்டச் செயலரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது. மன்னார் பகுதியில் தற்போது அதிநவீன தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்டு வரும் 50 மெகாவாட் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தின் சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தின் ஓர் அங்கமாகவே இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. பெரிய அளவிலான திட்டங்கள் உருவாக்கப்படும் போது, அந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் இது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த 9.2 மில்லியன் ரூபா நிதியானது, மிக விரைவில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலக அதிகாரிகளின் ஊடாக உரிய பயனாளர்களுக்குச் சென்றடைந்து, குடிநீர் வழங்கும் பணிகள் துரிதப்படுத்தப்படும் என மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

**வீடு, காணி விற்பனைக்கு**
வீடு, காணி வாங்க விற்க தொடர்பு கொள்ளவும்.
**077 255 0807**
ICS 320691A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 11 . 1945



இறப்பு 25 . 06 . 2026

## சித்திராராணி திருநாவுக்கரசு

(இளைப்பாறிய ஆசிரியை - யா / வட்டு இந்துக் கல்லூரி.
சிரேஷ்ட போதனாசிரியை தொலைக்கல்வி நிலையம் - வட்டுக்கோட்டை)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சித்திராராணி அவர்கள் கடந்த 25.06.2026 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அச்சுவேலியைச் சேர்ந்த திருவிளங்கம் - தங்கரத்தினம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பவளரத்தினம் தம்பதியரின் மூத்த மருமகளும், சுப்பிரமணியம் திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் - வட்டு இந்து கல்லூரி) அவர்களின் மனைவியும், ஜெகதீஸ்வரி (ஜெயா), இராமநாதன் (ராம்), சிவகாமி (பவி), சிவகுமார் (சிவா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சதீஸ்குமார், சுகுணராஜா, டயானா, ஹர்சாயினி ஆகியோரின் மாமியாரும், ஹரிஸ், லுக்சிகா, அக்ஷயா.ஷோன், ஜரா, டியா, ஹரிணி, வருணன், சுவேத்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற தேவிகாராணி மற்றும் வானதி, கேந்திரநாதன், பிரபாகரன் ஆகியோரின் சகோதரியும், Dr.நவரத்தினம், காலஞ்சென்றவர்களான ஆறுமுகநாதன், ஜெயபாலன், மற்றும் தனபாலன், இராசலிங்கம் (துரை), காலஞ்சென்ற மகேஸ்வரன் (இந்திரன்), மற்றும் நடராசா, இராசலட்சுமி, லோகேஸ்வரி, சண்முகநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2026) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவல் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதர்சங்க ஒழுங்கை,
சிவன் கோவிலடி,
சித்தன்கேணி, வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.
கணவர் - 076 578 1899

(cs) N-1

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 . 08 . 2004



மறைவு 29 . 06 . 2022

கடந்த 29.06.2022 அன்று சரவணை
ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி தீர்த்தக்கேணியில்
அகாலமரணமடைந்த

## அமரர் சதானந்தன் விதுஷன்

நான்கு ஆண்டுகள் கடந்தாலும்,
நீ விட்டுச் சென்ற நினைவுகள் என்றும் மறையாது.
ஒவ்வோர் நாளும் உன் சிரிப்பு மனதில் ஒலிக்கிறது.
எங்கள் இதயங்களில் என்றும் உயிரோடு வாழ்கிறாய்.


சரவணை மேற்கு,
வேலணை,
2ம் வட்டாரம்.

..ன் நினைவுகளோடு
குடும்பத்தினர்
076 915 1026

(CS/61775) N

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 02 . 1936



மறைவு 28 . 06 . 2026

## வேதாரணியம் நல்லம்மா

கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட வேதாரணியம் நல்லம்மா அவர்கள் நேற்று (28.06.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - முத்துப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வேதாரணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான சுப்பிரமணியம், தங்கம்மா மற்றும் இராசையா, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரிப் பிள்ளை, இராசம்மா மற்றும் யோகராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, அமிர்தலிங்கம் மற்றும் மனோன்மணி, காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், கனகரத்தினம் மற்றும் வசுந்தரா (கனடா), காலஞ்சென்றவர்களான பசுபதி, சிவஞானம், வாரித்தம்பி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், பிரபாகரன் (சுவிஸ்லாந்து), கிருபாநிதி (சுவிஸ்லாந்து), செல்வநிதி, சுதாநிதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவிதா (சுவிஸ்லாந்து), இராசலிங்கம் (சுவிஸ்லாந்து), இராமச்சந்திரன் (ஆசிரியர், யா / சாவகச்சேரி மகளிர் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும், மதுஷன், மாதவன், வினித், பவிரா, அனகன் (சுவிஸ்லாந்து) , நர்மதன் (மாணவன், யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும், அதிரனின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2026) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொடர்பு:
077 404 8956, 077 659 2363

தகவல்:
குடும்பத்தினர்.

(cs 61629) N-1

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 20 . 11 . 1944



மறைவு 01 . 06 . 2026

## அமரர் ஆறுமுகம் இரகுநாதன்

**(வர்த்தகரும், பாரஊர்தி உரிமையாளரும்)**

அவர்களின் வீட்டுக் கிரியைகள் நாளைமறுதினம் (01.07.2026) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து மதியம் 12.30 மணியளவில் **(ஹம்ஷிகா மஹால் (A1) ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபம் இல, 37, சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்)** நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்**

மேலும் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு துயருற்று இருந்த வேளையில் பல வழிகளில் உதவிபுரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் நேரிலும், தொலைபேசியிலும், சமூக ஊடகங்களுடாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியையில் கலந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இல. 206, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
மனைவி, பிள்ளைகள்.

(cs 61773) (N)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நட்டத்திலும் கடன் சுமையிலும் அரச முன்னணி நிறுவனங்கள்

## நிதிப் பகுப்பாய்வு அறிக்கையில் தகவல்

**கொழும்பு, ஜூன் 29**

**இலங்கையின் முன்னணி அரச நிறுவனங்கள் பலவும் இன்னமும் மிக ஆபத்தான நிதி நெருக்கடி மட்டத்தில் நீடிப்பதாக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள 2027ஆம் ஆண்டுக்கான நிதி உத்திப் பிரகடனத்தின் நிதி ஆபத்து பகுப்பாய்வு அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.**

நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 முக்கியமான அரச நிறுவனங்களின் நிதிக் குறிகாட்டிகளைப் பகுப்பாய்வு செய்து இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின்படி லங்கா சதொச, மில்கோ நிறுவனம், லங்கா சீனிக் கூட்டுத்தா பனம் மற்றும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகியன இன்னமும் 'அதிக நிதி ஆபத்து' மட்டத்திலேயே நீடிக்கின்றன. இந்த நிறுவனங்க ளில் தொடர்ந்து ஏற்படும் பில்லியன் கணக்கான நட்டங்கள், பலவீனமான பணப்புழக்கம் மற்றும் கட்டுக்கடங்காத அதிக கடன் சுமை ஆகியவையே இதற்குக் காரணம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கை மின்சாரசபை, இலங்கை கனிப்பொருள் எண்ணெய் கூட்டுத்தாபனம் மற்றும் துறைமுக அதிகாரசபை ஆகியன ஒப்பீட்டளவில் வலுவான நிதி நிலையை வெளிப்படுத்தியுள்ளன. இருப்பினும், அவையும் இன்னமும் 'குறைந்த ஆபத்து' மட்டத்திலேயே நீடிக்கின்றன. எனவே அதிக ஆபத்துள்ள லங்கா சதொச, மில்கோ போன்ற அரச நிறுவனங்களின் செயற்பாட்டு மற்றும் நிதி மறுசீரமைப்புத் திட்டங்களை உடனடியாகத் துரிதப் படுத்தவேண்டும் என் றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)



# இடைவிலகிய மாணவர்கள்; கிராம மட்டத்தில் ஆராய்க!

யாழ்ப்பாணம், ஜூன் 29

பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களின் குடும்ப மற்றும் பொருளாதாரச் சூழல் காரணிகளை, கிராமமட்ட உத்தியோகத்தர்களின் நேரடிப் பங்களிப்புடன் விரிவாக ஆராய்ந்து அவர்களை மீண்டும் கல்வியில் இணைப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற, யாழ். மாவட்டச் சிறுவர் அபிவிருத்திக் குழுவின் 'இரண்டாம் காலாண்டு குழுக் கூட்டத்தின்' போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் 69 மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகியுள்ளனர்என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. அதில் கல்வித் துறை மற்றும் சமூக அதிகாரிகளின் துரித செயற்பாடுகள் காரணமாக 60 மாணவர்கள் மீண்டும் பாடசாலைகளில் மீளிணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். எஞ்சிய மாணவர்களின் குடும்ப நிலைமைகளை கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-என்றார். (ச-இ)


# மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜூன் 29

சுன்னாகம் மத்தி செல்வபூமி பதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.40 மணி தொடக்கம் 10.40மணி வரையான சுப நேரத்தில் இடம் பெறவுள்ளது. கும்பாபிஷேகப் பெருவிழாவுக்கான கர்மாரம்பம் இன்று திங்கட்கிழமையும், எண்ணெய்க்காப்பு சாத்துதல் நாளை மறுதினம் புதன் கிமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறும். (க)

வேலணை புளியங்கூடல் செருத்தனைப்பதி உறையும் ஸ்ரீ இராஜ மகாமாரி அம்பாள் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (க)





# மயிலிட்டி கண்ணகை சித்திரத்தேரில் பவனி

யாழ்ப்பாணம், ஜூன் 29

மயிலிட்டி வீரமாணிக்கன் தேவன் துறை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய அலங்கார உற்சவத்தின் பதின்நான்காவது நாளான இரதோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பக்தி பூர்வமாக இடம் பெற்றது. காலை 9.00 மணிக்கு அபிசேகம் இடம் பெற்ற்ய் பூசை வழிபாடுகள் நடந்தேறின. தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் வசந்த மண்டப பூசை இடம்பெற்று கண்ணகை அம்மன் உள்வீதி உலா வந்து 2.00 மணிக்கு சித்திரத்தேரில் எழுந்தருளி ஆரோகணம் செய்தார்.

தேர் திருவிழாவை முன்னிட்டு ஈழத்து, இந்திய பிரபல தவில், நாதஸ்வர கலைஞர்களின் சிறப்பு இசை கச்சேரி இடம்பெற்றிருந்தது. (ச-100)

# 204 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் யாழ்ப்பாணத்தில் இன்னும் நிலுவையில்!

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலுவையில் உள்ள 204 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் தொடர்பில் பிரதேசமட்ட ரீதியாக உடனடித் தீர்வுகளை காணுமாறு அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் யாழ். மாவட்டச் செயலர் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற சிறுவர் அபிவிருத்திக் குழுவின் காலாண்டுக் கூட்டத்தின் போது, மாவட்டத்தின் தற்போதைய நிலைவரங்கள் குறித்து ஆராயப்பட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் புதிதாகக் கிடைக்கப்பெற்ற 59 முறைப்பாடுகள் உட்பட, ஒட்டுமொத்தமாக நிலுவையில் உள்ள 204 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் நிலுவையில் உள்ளன.

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் மாணவர் இடைவிலகல் தொடர்பாக விசேட கூட்டங்களை நடத்தி உடனடித் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.

தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் தொடர்பான இறுதி அறிக்கை அடுத்த காலாண்டுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# நாகர்கோவிலில் நிழற்குடை திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்.29

நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயம் அருகாமையில் தவமணிதேவி சதாசிவம் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நிழற்குடை நேற்றுத் திறக்கப்பட்டது. தவமணிதேவி சதாசிவத்தின் மருமகனான பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் திருஞானசம்மந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு நினைவு நிழற்குடையைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன், பருத்தித்துறை பிரதேசசபை உப தவிசாளர் காந்தரூபன், பருத்தித்துறை நகரசபை உப தவிசாளர் தேவராஜேந்திரன், உறுப்பினர்களான ரஞ்சன், நிமலேந்திரன், அல்றெஜி மற்றும் தவமணிதேவி சதாசிவத்தின் உறவினர்கள் கலந்துகொண்டனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## பக்திபூர்வமாக....

நிறைவடைந்ததும், நாகபூசணி அம்மன், விநாயகர் மற்றும் வள்ளி-தெய்வயானை சமேத முருகப் பெருமான் ஆகிய முத்தெய்வங்களும் உள்வீதியில் திருநடனத்துடன் எழுந்தருளி சித்திரத் தேரில் ஆரோகணித்தனர். சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டு விசேட தீபாராதனை நடத்தப்பட்டது. அடியவர்களின் 'அரோகரா' கோஷம் விண்ணதிர காலை 9 மணியளவில் முத்தேர் பவனி ஆரம்பமானது. நூற்றுக்கணக்கான ஆண் அடியவர்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், பறவை மற்றும் செதில் காவடிகள் எடுத்தும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். பெண் அடியவர்கள் பலரும் அடியழித்தும், கற்பூரச் சட்டிகள் ஏந்தியும் அம்மனை நெக்குருக வழிபட்டுத் தங்களது நேர்த்திகளைப் பக்திப் பெருக்குடன் செலுத்தினர். (அ-எ-66)

## இலங்கை...

இலங்கை 1994 முதல் இந்த உடன்படிக்கையில் இணைந்துள்ள போதிலும், 1979 ஆம் ஆண்டிலிருந்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி தமிழர்களை இலக்கு வைத்துக் கைது செய்தல், தடுத்து வைத்தல் மற்றும் வலிந்து காணாமலாக்குதல் போன்ற நடவடிக்கைகள் தொடர்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இறுதிக்கட்ட யுத்தத்தின் போது தமிழ் மக்களுக்கான மனிதாபிமான உதவிகளைத் தடுத்தமை சித்திரவதைக்குச் சமமானது என ஐ.நா. விசாரணைகள் சுட்டிக்காட்டியுள்ளன. அத்துடன், வடக்கு உள்ளிட்ட பகுதிகளில் பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகளை ஐ.நா. மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன.

மாறி மாறி வரும் அரசாங்கங்கள் போர்க்காலக் குற்றவாளிகளைப் பாதுகாப்பதால் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு இங்கு ஆழமாக வேரூன்றியுள்ளது. மேலும், இலங்கை 'ரோம் சாசனத்தில்' கையெழுத்திடாததால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்டவர்களுக்கான ஒரே தீர்வு சர்வதேச நீதிப்பொறிமுறை மட்டுமே என போரம் ஏசியா, பேர்ள் உள்ளிட்ட இந்த 9 அமைப்புகளும் தங்களது கூட்டறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளன. (அ-எ-இ)

## கேப்பாபிலவில்...

வில், 55 குடும்பங்களுக்குச் சொந்தமான 59.5 ஏக்கர் பூர்வீக வாழ்விடக் காணிகளையும், 4 குடும்பங்களுக்குரிய 100 ஏக்கர் மத்தியவகுப்புக் காணிகளையும் இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள நிலையிலேயே, அவற்றை மீட்டெடுப்பதற்காக மக்கள் இந்தத் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

மக்களின் இந்த நியாயமான போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்றைய போராட்டத்தில் கலந்துகொண்டார். அவருடன் இணைந்து சட்டத்தரணி குமாரசிங்கம் கம்சன் மற்றும் சூழல், சமூக அபிவிருத்தியை வலுவூட்டும் நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் திருமதி மாதுசனா திஷான் ஆகியோரும் போராட்டத்தில் பங்கேற்று மக்களுக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர். (அ-எ-இ)

## முறுக்கித்...

வீதி விபத்துகளைத் தடுத்து பாதசாரிகள் மற்றும் ஏனைய சாரதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸாரால் இந்த விசேட வீதி சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, இலக்கத் தகடுகள் இல்லாமை, முறையான ஆவணங்கள் இன்மை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி ஆபத்தான முறையில் வாகனங்களைச் செலுத்தியமை போன்ற விதிமீறல்களுக்காக இந்த அதிவேக சொகுசு மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அத்துடன், உரிய ஆவணங்களின்றி மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் வாகனங்களுக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் சாரதிகளுக்கு எதிராக இனிவரும் நாள்களிலும் இத்தகைய கடுமையான அதிரடிச் சோதனைகள் தொடரும் என கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸார் எச்சரித்துள்ளனர். (அ-எ-113-55)

## விபத்தில்...

வராவார். கடந்த 3ஆம் திகதி கடற்கரை வீதியில் நடந்து சென்றவரை உழவியந்திரம் மோதியுள்ளது. விபத்தில் காயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். உழவியந்திரத்தைச் செலுத்தி வந்தவருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் இல்லை என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-26)

## ரூபா...

கொள்வனவு விலை 332.22 ரூபாயாகவும், விற்பனை விலை 341.87 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது.

இலங்கை ரூபாவின் தற்போதைய பெறுமதி வீழ்ச்சியானது, 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என மத்திய [illegible] நிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். இம்முறை வீழ்ச்சியானது உள்நாட்டு தவறான நிர்வாகத்தால் அல்லாமல், உலகளாவிய சூழ்நிலைகளால் உந்தப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டு உள்நாட்டு காரணிகளால் மட்டுமே ரூபாவின் மதிப்பு 370 ரூபா வரை வீழ்ச்சியடைந்தது. ஆனால் தற்போது, உலகளாவிய நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் அமெரிக்க டொலர் உலகளவில் வலுவடைந்து வருவதால், ஏனைய பிராந்திய நாடுகளிலும் நாணய பெறுமதி வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்றது. (அ-எ-இ)

## பிரான்ஸ்...

பங்கேற்கவுள்ளனர். இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் கடல்சார் வர்த்தகத்தை வலுப்படுத்துவதை நோக்காகக் கொண்ட இந்தப் பயணத்தில், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத் தக்கவைப்பது மற்றும் ஐரோப்பியச் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துவது தொடர்பான உயர்மட்டப் பேச்சுகள் நடத்தப்படவுள்ளன.

கொழும்பு துறைமுகத்தில் பெரும் முதலீடுகளைச் செய்ய பிரான்ஸின் முன்னணி கப்பல் நிறுவனமான சி.எம்.ஏ சி.ஜி.எம். விருப்பம் தெரிவித்திருக்கும் நிலையில், பிரான்ஸில் வைத்து அந்த நிறுவனத்தின் தலைவர் ரோடால்ஃப் சாடேவை ஜனாதிபதி சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். கொழும்புத் துறைமுக மேற்கு முனையத்தின் இரண்டாம் கட்ட முதலீட்டு சாத்தியக்கூறுகள் தொடர்பாகவும் இந்த நிறுவனம் ஆராய்ந்து வருகிறது.

அண்மையில் உலக வங்கி வெளியிட்ட கொழும்புத் துறைமுகம் தொடர்பான சிறப்பு அறிக்கை மற்றும் சர்வதேசப் பிரதிநிதிகளின் இலங்கை வருகை என்பன இலங்கையின் கடல்சார் பொருளாதாரம் மீதான உலகளாவிய கவனத்தை ஈர்த்துள்ளன. இந்தப் பின்னணியில், ஜனாதிபதியின் பிரான்ஸ் பயணமானது நாட்டின் துறைமுக அபிவிருத்தி மற்றும் ஐரோப்பிய முதலீடுகளுக்குப் பெரும் திருப்புமுனையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-எ-இ)

## சபாநாயகரை...

பேரவை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற விமர்சனமும் எதிரணி உறுப்பினர்கள் வசம் உள்ளது. ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவருவதற்குரிய உறுப்பினர் பலம் இல்லாததாலேயே, சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பிரேரணையை நிறைவேற்ற முடியாவிட்டாலும், விவாதத்தின்மூலம் தகவல்களை வெளிப்படுத்த முடியும் என எதிரணி நம்புவதாகக் கூறப்படுகின்றது (அ-எ-44)

## டித்வா...

ரூபா மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், மீள் குடியேற்றத் திட்டத்தின் சிக்கல்தன்மை காரணமாகப் பணிகளை இந்த வருடத்துக்குள் முடிக்க முடியாது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன், இந்த வருட நிதியின் பயன்படுத்தப்படாத இருப்பை அடுத்த வருடத்துக்குக் கொண்டு செல்ல சட்டபூர்வ ஏற்பாடுகள் இல்லை. எனவே, எஞ்சிய பணிகளுக்கான செலவுகள் இந்த வருட இறுதியில் மதிப்பிடப்படும்.

2027ஆம் ஆண்டு முதன்மைச் செலவு வரம்புக்குள் சில பணிகளை நிர்வகித்தாலும், எஞ்சிய பணிகளுக்கு மேலதிக நிதி தேவைப்படலாம். இந்த நிலையில், நடப்பு ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பணிகளை நிறைவு செய்வதற்காக மட்டும், 2027 இல் துணை மதிப்பீடொன்றின் மூலம் நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெற நடவடிக்கை எடுக்க முடியும் என அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## செம்மணியில்...

நேற்று மாலை 4 மணியளவில் அணையாவிளக்கு தூபிக்கு மலர்மாலை அணிவித்து, ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழியில் தற்போது முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணிகளில் இதுவரையில் 412 என்புகூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 1999ஆம் ஆண்டு கால பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணிகளின் போது மீட்கப்பட்ட 15 என்புக் கூடுகளுமாக 427 என்புகூடுகளை நினைவுறுத்தி 427 தீப்பந்தங்களும் ஏற்றப்பட்டன.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற 'அணையா விளக்கு'எழுச்சிப் போராட்டத்தில் முன்வைக்கப்பட்ட ஆறு அம்சக் கோரிக்கைகளை மீண்டும் உறுதியுடன் வலியுறுத்தும் நிகழ்வாக 'உரிமைப்பந்தம்' அமைதி வழி மக்கள் எழுச்சி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## நயினாதீவில் நெரிசலற்ற கடற்பயணத்துக்கு வேலணைப் பிரதேச செயலகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன் 29
வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழாவையொட்டி ஆலயத்தை நோக்கித் திரள் திரளாக வருகை தந்த பெருமளவு அடியவர்களை ஒருங்கிணைத்துப் பாதுகாப்பான முறையில் படகுகளில் ஏற்றியனுப்பும் பணியில் வேலணைப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் ஈடுபட்டிருந்தனர்.
குறிகாட்டுவான், நயினாதீவு இறங்குதுறைகளில் இவ்வாறு வேலணைப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (ச-66)

## கலைகளைப் பாதுகாப்பதற்கு நவீன மாற்றங்கள் அவசியம்!

### கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூன் 29
எமது கலைகள் நிலைத்திருக்க வேண்டுமாயின், கலைஞர்களும் காலத்தின் தேவைக்கு ஏற்ப சில மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுப்பிரமணியம் முரளிதரன் தெரிவித்துள்ளார்.
வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும், கரைச்சிப் பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கலைஞர் ஒன்றுகூடலும் ஆற்றுகையும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,
எப்போது நாம் கலைகளுடன் மனதை ஒன்றிணைக்கின்றோமோ அப்போது எமது மனம் மகிழ்ச்சியடைகின்றது. உடுக்கை, கரகம் போன்ற பாரம்பரியக் கலைகளை அடுத்த தலைமுறை எவ்வளவு காலம் முன்னெடுத்துச் செல்லும் என்பது ஒரு சவாலான விடயமாக உள்ளது. சமூக ஊடகங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வரும் இக்காலத்தில், பொதுவான நிகழ்வுகள், ஆலய விழாக்கள் மற்றும் கலாசார நிகழ்வுகளுக்கு மக்கள் நேரடியாகச் சென்று பங்கேற்பது குறைந்து வருகின்றது,
அதேவேளை, சமூக ஊடகங்களின் ஊடாக உலகின் எந்த மூலையிலும் நடைபெறும் நிகழ்வுகளை உடனுக்குடன் பார்ப்பதற்கான வாய்ப்பு மக்களுக்கு கிடைத்துள்ளது. எனவே, கலைகளை பரவலாக அறிமுகப்படுத்துவதற்கும், இளைஞர்கள் மற்றும் வளர்ந்து வரும் சமூகத்தைச் சென்றடைவதற்கும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த வேண்டியது அவசியம்.
எனவே, எங்களுடைய கலைகளையும் பண்பாட்டு விடயங்களையும் வெளிக்கொண்டு வந்து மற்றவர்கள் பார்ப்பதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் இவ்விடயங்கள் எமக்குள்ளேயே அடங்கிவிடும். வருங்காலச் சந்ததியினருக்கு உரிய முறையில் கடத்தப்பட வேண்டும். என்றார். (க)

## அனைத்து மக்களுக்குமே அஸ்வெசும தேவைப்பாடு

### ஐ.ம.சக்தி சுட்டிக்காட்டு

நாட்டு மக்கள் அனைவருக்கும் அஸ்வெசும கொடுப்பனவு அவசியம் என்ற நிலையிலேயே நாட்டு பொருளாதார நிலைமை உள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார். வாழ்க்கைச் சுமை அதிகரிப்பால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்தபோதிலும் இங்கு குறைக்கப்படவில்லை. எனவே, ரணிலால் அறிமுகப்படுத்தப்பட்ட எரிபொருள் சூத்திரம் பற்றி இந்த அரசாங்கம் கற்றுக்கொள்ள வேண்டும்.
சர்வதேச நாணயநிதியத்தை விமர்சித்து பயன் இல்லை. ஏனெனில் இந்த ஆட்சியாளர்களுக்கு அனுபவம் இல்லை. ரணில் விக்கிரமசிங்கவால் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார மறுசீரமைப்பு அமுல்படுத்தப்பட்டிருந்தால் மீண்டெழக்கூடியதாக இருந்திருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

**தனியார் வகுப்பு**
A/L Chemistry, O/L Maths மற்றும் தியறி மற்றும் Paper Classes வீட்டிற்குவந்து கற்பிக்கப்படும்.
077 559 8670
(cs32065) N

**வீடு வாடகைக்கு**
மானிப்பாய் - உடுவில் வீதியில்,
மருதடிச் சந்தியிலிருந்து 1 Km தூரத்தில் சகல வசதிகளுடன் கூடிய; நான்கு அறைகள் உடைய வீடு வாடகைக்கு உண்டு.
(உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது)
மேலதிக தகவல்களுக்கு :
077 400 4792, 077 724 6352
(CS61776) N

**வேலையாட்கள் தேவை**
இத்தாவில், பளை பிரதேசத்தில் புதிதாக அமையவிருக்கும் உணவகம் ஒன்றிற்கு சமையல் உதவியாளர் தேவைப்படுகிறது.
அனுவபம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
076 803 5551



## அச்சுவேலி மத்திய இளைஞர் அணி தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூன்29
தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில், அச்சுவேலி மத்திய இளைஞர் கழக அணி, யாழ்ப்பாண மாவட்டச் சம்பியனாகி தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளது. காலிறுதியில் உடுவில் பிரதேச செயலக அணியையும், அரையிறுதியில் நல்லூர் பிரதேச செயலக அணியையும், இறுதிப்போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியையும் வீழ்த்தி மாவட்ட வெற்றி அணியாக கோப்பாய் பிரதேச செயலக அணியான அச்சுவேலி மத்திய இளைஞர் கழக அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்தவாரம் கொழும்பில் நடைபெறவுள்ள மாவட்டங்களுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டிகளில், அச்சுவேலி மத்திய இளைஞர் கழக அணி பங்கேற்கவுள்ளது. (க)

**காரைநகர் அபிவிருத்திச் சபையின் தலைவர் தெரிவிற்கான விசேட பொதுக்கூட்டம்**

- தலைமை :- திரு.தேவலிங்கம் பரணீதரன் (உப தலைவர்)
- இடம் :- காரைநகர் பிரதேச கலாச்சார மண்டபம் வலந்தலைச் சந்தி காரைநகர்.
- காலம் :- 12.07.2026 ஞாயிற்றுக்கிழமை
- நேரம் :- காலை 10.30 மணி

குறிப்பு :- ஆயுட்கால மற்றும் 2026 ம் ஆண்டு சந்தா அங்கத்தவர்கள் அனைவரும் கலந்துகொள்ள முடியும்

காரைநகர் அபிவிருத்திச் சபை,
சின்னாலடி, காரைநகர்.
தொலைபேசி: - 021 221 1757
29.06.2026

திரு.பொன்னம்பலம் பரந்தாமன்
செயலாளர்.
(CS61770) N


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media